பகைவர்கள்: பலனடைவார்கள்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 04 வெள்ளிக்கிழமை (16-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:143

### அரசின் உதவியுடன் ஆஸ்திரேலியா செல்லும் நோக்கில்

# கருணா குழுவினர் கொழும்புக்கு இராணுவ பாதுகாப்புடன் வந்தனர்

## இடையில் தம்புள்ள வாடிவீட்டில் தரித்து நின்று இரவுபோசனம்

கொழும்பு,ஏப்ரல்16

**கிழக்கிலங்கை மக்களால் நிராகரிக்கப்பட்ட கருணா தனது நம்பிக்கைக்குரிய இருபது பேருடன் கொழும்புக்கு வந்துள்ளார். ஆஸ்திரேலியா செல்லும் நோக்கில் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடனேயே கருணா குழுவினர் கொழும்புக்குத் தப்பி வந்தனர் என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.**

தமிழீழ விடுதலைப் புலிகளாலும், தமிழ்த்தேசிய உணர்வுடைய மக்களாலும் விரட்டியடிக்கப்பட்ட கருணா பொலநறுவை ஊடாகவே தப்பிவந்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் 22 பேரும் திங்கட்கிழமை புலிகளுடன் சந்திப்பு

### முதற்றடவையாக கிளிநொச்சியில் நடக்கிறது

கிளிநொச்சி,ஏப்.16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் வடக்கு-கிழக்கில் இருந்து தெரிவான 20 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் மூலம் தெரிவான மா.க.ஈழவேந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் பங்குபற்றுவர்.

கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகள், விடுதலைப் புலிகளும் கூட்டமைப்பும் இணைந்து முன்னெடுக்கும் திட்டங்கள் ஆகியன தொடர்பாக இந

(12ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.மெதடிஸ்த சிறுவர் பராமரிப்பு இல்லத்தில்

## சிறுவர்கள் மீது ஓரினச்சேர்க்கை; சந்தேகத்தில் பணியாளர் கைது!

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்நகரில் வேம்படிப் பகுதியில் அமைந்துள்ள மெதடிஸ்த தேவாலய சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் தங்கியிருந்த இரு சிறுவர்களை தகாதமுறையில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்த முயன்றார் என்று கூறப்படும் போதகர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் யாழ். பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார். பிரஸ்தாப இரு சிறுவர்களும் மருத்துவ சோதனைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனிமேல் பிரச்சினைகளை படையினரும் புலிகளும் பரஸ்பரம் பேசித் தீர்க்க முடிவு

### வவுணதீவுச் சந்திப்புப் பற்றி ரமேஷ்

மட்டக்களப்பு,ஏப்.16

படையினரும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவது தொடர்பாகவும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை சரிவரச் செயற்படுத்துவது தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்தோம். எதிர்காலத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகளை இரு தரப்பினரும் உடன் தொடர்புகொண்டு பேசித் தீர்த்துக் கொள்வது என்றும் முடிவு செய்துள்ளோம்.

வவுணதீவில் நேற்றுப் பிற்பகல் நடந்த படையினர் - புலிகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் தெரிவில் அரசு தொடர்ந்து திண்டாட்டம்

கொழும்பு,ஏப்.16

13ஆவது நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதில் அரசாங்கத்திற்குப் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியும் தனது சபாநாயகர் வேட்பாளருடன் அரசாங்கத்தோடு பலப்பரீட்சை நடத்தக் கிளம்பியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவரான முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவைச் சபாநாயகராக்க அரசாங்கம் எண்ணியது. அதற்குப் பல சட்டச்சிக்கல்கள் தடையாக இருக்கின்றன.

இதனால் அரசாங்கம் இம்முயற்சியைக் கைவிட்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான டியூ குணசேகராவை சபாநாயகராக்க முனைகிறது.

எதிர்வரும் 22ஆம் திகதி 13 ஆவது நாடாளுமன்றம் முதன்முறையாகக் கூடுகிறது. நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் முதற்காரியமாக நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அரசமைப்பும், நாடாளுமன்ற நிலையியற் கட்டளையும் இதனை வலியுறுத்தியுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நீலனின் வித்துடல் விதைப்பு

கிளிநொச்சி,ஏப்.16

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத் துறையின் உதவிப் பொறுப்பாளர் லெப். கேணல் நீலனின் வித்துடல் நேற்று விசுவமடு மாவீரர்துயிலும் இல்லத்தில பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது. முன்னதாக இவரது வித்துடல் அவரது தற்காலிக முகவரியில் உள்ள இல்லத்தில் வைக்கப பட்டு இறுதி வீரவணக்க நிகழ்வுக்காக புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டது. அங்கு இறுதி வீரவணக்கக்கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். நீலனின் துணைவியார் வித்துடலுக்கான ஈகச்சுடரினை ஏற்றி மலர் மாலையை அணிவித்தார். வித்துடலின் பேழைக்கு தாயார் மாலை அணிவித்தார். தொடர்ந்து வீரவணக்க உரைகளை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் மற்றும் போராளி நியூட்டன் ஆகியோர் வழங்கினர். மலர்வணக்கத்தைத் தொடர்ந்து வித்துடல் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுதது்ச் செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதையுடன் புனித புதை குழியில் விதைக்கப்பட்டது. இந் நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ஐ-ரி)



படையினரும் புலிகளும் நேற்று வவுணதீவில் சந்தித்த பின்னர் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிடுகிறார் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ்.



நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட 23 ஆவது படையணி கட்டளை அதிகாரி பிரிகேடியர் விஜய குணவர்த்தனவும் ஏனையோரும்...

## கருணா பற்றி எதுவும் தெரியாது என்கிறது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு,ஏப்.16

கருணாவுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கினர் என்று வெளியாகிய தகவல்களை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் மறுத்திருக்கின்றது.

தமக்குப் பாதுகாப்புத் தருமாறு கருணா இதுவரை இராணுவத்தினரிடம் கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை. கருணா தொடர்பாக எந்தப் பொறுப்புக்களையும் பாதுகாப்பு அமைச்சு ஏற்கவில்லை.

கருணா மற்றும் அவரது முக்கிய சகாக்கள் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றியும் பாதுகாப்பு அமைச்சுக்கு எதுவுமே தெரியாது.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)



நான் உங்கள் புத்தாண்டு. உங்களுக்கொரு அன்பளிப்பு வைத்திருக்கின்றேன்.

உங்களுக்கு வெற்றிகரமான ஆரம்பம். ரூ.50,000 அல்லது அதற்கு மேலதிகமான தொகையை கால வைப்புச் செய்பவர்களுக்கு, தேசிய சேமிப்பு வங்கி விசேட அன்பளிப்பை வழங்குகிறது. 2004 ஏப்பிரல் 14 - 21 வரை மட்டுமே இச்சலுகை.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

NSB தேசிய சேமிப்பு வங்கி

### பலஸ்தீனத்தின் எதிர்காலம் தொடர்பான

# இஸ்ரேலின் ஒரு தலைப்பட்ச முடிவுக்கு பேராதரவு தருகிறார் ஜனாதிபதி புஷ்!

வாஷிங்ரன்,ஏப்.16

மத்திய கிழக்கின் எதிர்காலம் குறித்து இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் ஒரு தலைப்பட்சமாக வெளியிட்ட திட்டத்துக்கு பலத்த ஆதரவு தெரிவித்திருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ.ஜ் டபிள்யூ புஷ்.

இது, புலஸ்தீனத் தலைவர்களைப் பெருஞ் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ஏரியல் ஷரோனின் முடிவு சரித்திரப் பிரசித்தி பெற்றது; துணிகரமானது என்று ஜனாதிபதி புஷ் புகழாரம் சூட்டியிருக்கின்றார்.

பலஸ்தீனர்களின் பிரதேசத்தில் தாங்கள் ஆக்கிரமித்துள்ள காஸா புறத்தில் உள்ள அனைத்து இஸ்ரேலிய குடியேற்றங்களையும், மேற்குக்கரையில் ஒரு சில இஸ்ரேலியக் குடியேற்றங்களையும் வாபஸ் பெறுவதையும்-

மேற்குக் கரையில் உள்ள சில பிரதேசங்களை இஸ்ரேல் தொடர்ந்து தக்க வைத்திருப்பதையும் -

உள்ளடக்கிய திட்டம் ஒன்றை ஷரோன் வெளியிட்டிருக்கின்றார்.

பிரதமர் ஷரோன் தற்போது அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அங்கு அவருடன் பேச்சு நடத்திய பின்னர், அவரது திட்டத்தை வெகுவாகப் பாராட்டி கருத்து வெளியிட்டார் அமெரிக்க ஜனாதிபதி புஷ்.

ஆனால், இந்தத் திட்டம் பலஸ்தீன மக்களின் உரிமைகளைக் கொலலும் நோக்கமுடையது என்று பலஸ்தீனப் பிரதமர் அகமட் குவரி சீற்றத்துடன் தெரிவித்தார்.

"ஜனாதிபதி புஷ், தாம் பலஸ்தீன மக்களின் சார்பில் விட்டுக் கொடுப்புக்களை தாம் செய்யலாம் என நினைக்கின்றார். நாங்கள் அதனை ஏற்க முடியாது" - என்றார் அவர்.

"1967 எல்லை நிலைகளுக்கு மீண்டும் திரும்ப முடியாது என்று கூறியதன் மூலம், பலஸ்தீனப் பிரதேசத்தை ஆக்கிரமித்து இஸ்ரேல் அமைத்திருக்கும் குடியேற்றங்களை சட்டரீதியாக அங்கீகரித்திருக்கும் முதல் ஜனாதிபதி புஷ்தான்" - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இதேசமயம் -

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாகத் தலைவர்கள், ஒரு தலைப்பட்சமாக அறிவிப்புக்களை விடுத்து நிலைமையைக் குழப்பக் கூடாது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் குறிப்பிட்டுள்ளார்.

"சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்களுக்குள் பேசி இணக்கம் காணும் திட்டம் ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸிலினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அத்தகைய திட்டமே இறுதித் தீர்வாக இருக்க முடியும்" - என்று கோபி அனான் குறிப்பிட்டார்.

அத்தகைய இறுதித் தீர்வையும் அதற்கான அமைதி முயற்சிகளையும் குழப்பும் முன் நடவடிக்கைகள் எதனையும் செய்யாமல் சம்பந்தப்பட்ட தலைவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் திடமாக நம்புகின்றார் என அவரின் பேச்சாளர் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## உலக அரங்கில்

இதேவேளை,

நேற்றுமுன்தினம் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனை தம்பக்கத்தில் வைத்துக் கொண்டு அவரது திட்டத்தைப் புகழ்ந்துரைத்து அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெளியிட்ட கருத்துகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்காவில் உள்ள யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மத்தியில் பெருவரவேற்பையும் ஆதரவையும் அவருக்கு பெற்றுத் தந்திருப்பதாக சில சர்வதேச செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (க)

# பாக். அணு விஞ்ஞானி கானை கண்காணிக்கிறது அமெரிக்கா!

வாஷிங்ரன்,ஏப்.16

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி ஏ.கியூ.கானின் வலையமைப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா கண்காணித்து வருகிறது என இந்திய செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

"பாகிஸ்தான் அரசுடன் சேர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விஞ்ஞானி கானின் வலையமைப்பை குலைப்பதே எங்களது முக்கிய குறிக்கோள்" என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரிச்சட் பௌச்சர் நிருபர்களிடம் கூறினார்.

இப்பிரச்சினையில் இரு நாடுகளும் கூட்டாக இறங்கியுள்ளதால் கானின் தொடர்பு வலையமைப்புத் தொடர்பான தகவல்களை எளிதில் சேகரிக்க முடிகிறது.

வடகொரியாவின் இரகசிய இடத்தில் வைக்கப்பட்டுள்ள 3 அணு சாதனங்கள் தம்மிடம் 5 ஆண்டுகளுக்கு முன்பே காட்டப்பட்டன என விசாரணை அதிகாரிகளிடம் கான் கூறியுள்ளார்.

கான் அளித்துள்ள வாக்கு மூலத்தின் மூலம் வடகொரியாவுக்கு அவர் மூலம் அணு ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் விற்கப்பட்டுள்ளது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்த விடயத்தில் வடகொரியா பொய் சொல்வதும் தெரியவந்துள்ளது.

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் திறன் தங்களிடம் உள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளதை அமெரிக்கா தீவிரமாக எடுத்துக் கொள்ளும் - எனவும் பௌச்சர் மேலும் கூறினார். (க)

# ஸ்ரீ சத்திய சாயி பாபாவைத் தரிசித்து ஆசி பெற்றார் பிரதமர் வாஜ்பாய்

பெங்களூர்,ஏப்.16

புட்டபர்த்திக்குத் தமது குடும்பத்தினருடன் சென்ற பிரதமர் வாஜ்பாய் அங்கு பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவைத் தரிசித்து ஆசிபெற்றார்.

பெங்களூர் அருகேயுள்ள காடுகோடி பிருந்தாவன் ஆச்சிரமத்தில் தங்கியுள்ள ஸ்ரீசத்திய சாயி பாபாவை பிரதமர் வாஜ்பாய் கடந்த புதன்கிழமை காலை தரிசித்து ஆசி பெற்றார்.

அவருடன் அவரது வளர்ப்பு மகள நமிதா பட்டாச்சார்யா, மருமகன் ரஞ்சன் பட்டாச்சார்யா, பேர்த்தி நிகாரிகா ஆகியோரும் ஆசிபெற்றனர்.

பிருந்தாவன் ஆச்சிரமத்தில் பிரதமர் வாஜ்பாய் குடும்பத்தினர் சுமார் 55 நிமிடங்கள் தங்கிருந்தார்கள். அவர்களுடன் பாரதீய ஜனதாக் கட்சியின் கர்நாடக தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான அனந்தகுமாரும் சென்றிருந்தார். பின்னர் சாயி பாபாவிடம் விடைபெற்றுக் கொண்டு பிரதமர் பெங்களூர் திரும்பினார். (க)

# தென்னாபிரிக்கப் பொதுத் தேர்தலில் தேசியக் காங்கிரஸ் வெற்றிநடை!

தென்னாபிரிக்காவில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் மிகப்பெரிய வெற்றியை நோக்கி நடைபோட்டுக்கொண்டிருக்கிறது என்று ஆரம்பத்தில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும்,நாட்டின் அரசமைப்பை மாற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆசனங்களை இத்தேர்தலில் ஆபிரிகக் தேசியக் காங்கிரஸ் பெறுமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளில் 60 வீதமானவற்றை ஆபிரிக்க தேசியக் காங்கிரஸும் 21 வீதத்தைப் பிரதான எதிரணியான ஜனநாயகக் கூட்டமைப்பும் சுவகரித்திருந்தன.

தென்னாபிரிக்காவில் இனமோதல முடிவுக்கு வந்து பத்தாண்டுகளில் நடைபெறும் மூன்றாவது பொதுத்தேர்தல் இதுவாகும். முன்னர் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலா தலைமையிலும், அடுத்த இரண்டாவது - பொதுத்தேர்தலில் தாபோ எம்பிக்கி தலைமையிலும் தென்னாபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

தற்போது மூன்றாவது பொதுத் தேர்தலில் - மீண்டும் ஒருதடவை - இரண்டாவது முறையும் - தாம் ஆட்சி அமைப்பதற்கு அங்கீகாரம் கோரி மக்கள் முன்வந்திருக்கிறார் அந்நாட்டு அதிபர் தாபோ எம்பிக்கி.

அவருக்கு மக்கள் பெருவாரியாக வாக்களித்து அவரது அரசுக்கு மீண்டும் ஆட்சி அமைக்க அனுமதி வழங்கியிருக்கின்றார்கள் என்று அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

தென்னாபிரிக்காவின் 2கோடி 10 லட்சம் வாக்காளர்களில கணிசமானோர் நீண்ட கியூவரிசைகளில் காத்து நின்று ஆர்வத்துடன் வாக்களித்தனர் என்று கூறப்பட்டது.

வெளியே நீண்ட வரிசைகளில் காத்துநிற்போருக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் பல இடங்களில் வாக்களிப்பு நேரத்திற்குப் பின்னரும் வாக்குச் சாவடிகள் திறந்து வைக்கப்பட்டு, வாக்காளர்கள் தமது உரிமையைப் பயன்படுத்த சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நெல்சன் மண்டேலாவும் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று தமது வாக்கை அளித்தார். (க)

# பெரும் பயங்கரவாதத் தாக்குதல் முயற்சியை ஜோர்தான் நாட்டு அதிகாரிகள் முறியடித்தனர்

அம்மான்,ஏப்.16

ஜோர்தான் நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகம் உட்பட முக்கிய பகுதிகளில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த தீவிரவாதிகளின் சதி முறியடிக்கப்பட்டது.

ஜோர்தான் நாட்டில் தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் கடந்த 10 ஆம் திகதி மூன்று ட்ரக்குகள் மற்றும ஒரு காரில் கொண்டு வரப்பட்ட பெருமளவிலான வெடிபொருள்களை அந்நாட்டுப் பொலீஸார் கைப்பற்றினர். இச்சம்பவத்திற்குப் பின்னர் நடத்தப்பட்ட விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகம் உட்படப் பல்வேறு முக்கிய இடங்களைத் தகர்க்கவே இந்த வெடிப் பொருள்கள் கொண்டு வரப்பட்டன என்பது தற்போது தெரியவந்துள்ளது.

உரிய நேரத்தில் பொலீஸார் செயல்பட்டிருக்காவிட்டால் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருககலாம் என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் அந்நாட்டு மன்னர் அப்துல்லா.

இச்சதியை முறியடித்த புலனாய்வுத்துறைத் தலைவர் ஜெனரல் சாத் கையருக்கு அந்நாட்டு மன்னர் அப்துல்லா கடிதம் எழுதியுள்ளார்.

அதில் "நாட்டின் முக்கிய இடங்களைத் தேர்வு செய்து தகர்க்கத் திட்டமிட்டிருந்த தீவிரவாதிகளின் செயல் முறியடிக்கப்பட்டுள்ளது. வெடிபொருள்கள் மூலம் நடத்தவிருந்த இச்சதியை உங்களது அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியால் வெற்றிகரமாக முறியடித்துள்ளீர்கள்" என்று மன்னர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பதில் அளித்துள்ள கையா "சதி செயலில் ஈடுபட்டவர்கள் பழமைவாதிகள் மதத்தின் வழியாக நம் நாட்டுப் பெண்கள், குழந்தைகள், முதியோர் இடையே குழப்பத்தை உண்டாக்க தீவிரவாதிகள் முயற்சித்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

இச்சம்வம் தொடர்பாக கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட இருவர் அல்-கெய்டா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. இவர்கள் 1990 ஆம் ஆண்டுகளில் ஆப்கானில் சோவியத் படைகளை எதிர்த்துப் போரிட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் கைது செய்யப்பட்டமைக்குப் பின்னர் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு அமைச்சகம், ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், அமெரிக்கத் தூதரகம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் எனப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சுலைமான் கலேத் தர்விஷ், மோவாபக் அலி அத்வான் மற்றும் அஸ்மி ஜெய்யுவாசி ஆகிய மூவரின் தலைக்கு ஏற்கனவே சுமார் 65 லட்சம் ரூபா சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் அஸ்மி இன்னும் தலைமறைவாகவே இருக்கிறார்.

# சுதந்திரக்கூட்டமைப்பின் முதலாவது நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நாளை

## அனைவரும் தம்பதியர் சகிதம் கண்டியில் கூடுகிறார்கள்

கண்டி,ஏப்.16

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நாளை சனிக்கிழமை கண்டியில் நடைபெறும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார்.

தேர்தலின் பின் முதன்முறையாகக் கூடும் இக்கூட்டத்திற்கு அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் மனைவிமாரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இது உத்தியோகபூர்வமான நாடாளுமன்றக்குழுக் கூட்டமாக அமையாது.

ஒரு விசேட ஒன்றுகூடல் போன்றே அமையும் எனவும் கூறப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் சிரார்த்ததினமும் 17 ஆம் திகதிதான் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் விசேட மத வழிபாடுகளும், அன்னதானங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# கருணா குழுவினரால் விரட்டப்பட்டோர் திரும்பி வரத் தொடங்கியுள்ளனர்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து கருணா குழுவினரால் விரட்டியடிக்கப்பட்ட வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக வடபகுதியினர் இப்போது திரும்பி வரத் தொடங்கியுள்ளனர்.

திரும்பி வருபவர்களில் வைத்தியர்கள், மருத்துவ நிபுணர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் முதலானோரும் அவர்களுடைய உறவினர்களும் அடங்குகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் வேண்டுகோளை அடுத்து பெரும்பாலானவர்கள் இதுவரை திரும்பிவிட்டார்கள். (க)

## ஓட்டமாவடியில் கைக்குண்டு வீச்சு!

மட்டக்களப்பு,ஏப்.16

மட்டக்களப்பு, ஓட்டமாவடிப்பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை கைக்குண்டு வீசப்பட்டது. அதனால் வீடு சேதமடைந்தது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சி ஒன்று அலுவலகமாகப் பயன்படுத்திய வீடே கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியது. இதனால் வீட்டின் கதவு, ஜன்னல் ஆகியவை முற்றாக சேதமடைந்துள்ளன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

# வைத்தியசாலையில் டாக்டர்கள் இல்லை; பொதுமக்கள் மறியல் போராட்டம்!

## தம்பலகாமத்தில் இப்படிச் சம்பவம்

கன்னியா,ஏப்.16

தம்பலகாமம் அரசினா வைத்தியசாலையின் முன்னே நேற்று அப்பகுதிக் கிராமவாசிகள் மறியல் போராட்டம் நடத்தினர்.

இந்த வைத்தியசாலையில் பணியாற்றிய வைத்தியர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். அதேவேளை அங்கிருந்த மற்றொரு பெண வைத்தியரும் விடுமுறையில் சென்றுள்ளார்.

இந்த நிலையில் வைத்தியசாலை பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இங்கு வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களும் கூட சிகிச்சை பெற முடியாத நிலையில் வீடு திரும்பியுள்ளனர்.

இதனைக் கண்டித்தே நேற்று மறியல் போராட்டம் இடம்பெற்றது. இந்த நிலையில், மாவட்ட பிரதி பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஈ.ஜீ.ஞானகுணாளன் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான க.துரைரத்தினசிங்கம் ஆகியோர் அங்கு சென்று மறியல் போராட்டக்காரர்களிடம் நிலைமையைக் கேட்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து தற்காலிகமாக வைத்தியர் ஒருவர் கடமையாற்றுவதற்கான ஏற்பாட்டினை மாவட்ட பிரதி பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஞானகுணாளன் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை, இந்த வைத்தியசாலைக்கென நிரந்தர வைத்தியர்களைக் கடமைக்கு அமர்த்தும் வகையில் சுகாதார அமைச்சருடன் பேசி இதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாக துரைரத்தினசிங்கம் எம்.பி.உறுதியளித்துள்ளார்.(க-187)

# துடுப்பாட்ட மட்டையினால் தாக்கப்பட்டவர் உயிரிழப்பு

சங்கானையில் துடுப்பாட்ட மட்டையால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் மரணமாகியுள்ளார். இந்த மரணம் தொடர்பாகக் கைதான மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானையில் உள்ள அகதிமுகாமில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

சுந்தரலிங்கம் ஜானசுந்தரன் (வயது 25) என்பவரே தலையில் பலத்த காயம் அடைந்தார். யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த அவர் 13ஆம் திகதி உயிரிழந்தார். அதையடுத்து மரண விசாரணைகளை மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் நடத்தினார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஸ்ரீகாந்தன், ரஜனிகாந்தன், ரவி ஆகிய மூவரைப் பொலீஸார் நீதிவான் முன் ஆஜர் செய்தனர். மூவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-6)

உதயன்

# முதல் சோதனை!

புதிய அரசை அமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஆரம்பத்திலேயே ஏற்பட்டிருக்கும் இழுபறிக்கு இன்னும் தீர்வு வந்தபாடாக இல்லை. முறுகிக்கொண்டு நிற்கும் மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பியை) சமரசம் செய்து சமாளிப்பதற்கான முயற்சியாக முக்கிய பேச்சுகள் நேற்றும் இடம்பெறவிருந்தன.

நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையைப் பெறாத - சிறுபான்மை உறுப்பினர்களைக் கொண்ட - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு புதிய அரசை அமைத்துவிட்டாலும், நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை அது எப்படிக் காட்டப் போகின்றது என்ற சந்தேகம் அனைவருக்கும் இருந்தே வருகிறது.

இந்த அரசு நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணை மூலம் தனது பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டியிருக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் அந்தப் பிரேரணை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் மிகமுக்கியமானதாக இருக்கும் என்று பலரும் கருதினர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு தப்பிப்பிழைப்பதற்கு அது மிகமுக்கிய தடைதாண்டலாக இருக்கும் என்றே அவதானிகள் நம்பினர்.

ஆனால், அத்தகைய நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்னரே புதிய முட்டுக்கட்டை ஒன்றை அந்த அரசு எதிர்கொள்ளப்போகின்றது என்பதுதான் இப்போதைய நிலைமை.

எதிர்வரும் 22ஆம் திகதி முதன்முதலாக இந்தப் பதின்மூன்றாவது நாடாளுமன்றம் கூடியதும் ஆரம்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெறும். மூத்த - சிரேஷ்ட - நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தச் சத்தியப்பிரமாண வைபவத்தை நடத்திவைப்பார்.

அதையடுத்து, இடம்பெறப்போகும் சபாநாயகர் தெரிவுதான் புதிய அரசுக்கு இக்கட்டும் தலையிடியும் தரும் விவகாரமாக மாறப்போகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சபாநாயகர் பதவிக்குரிய தனது வேட்பாளராக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை முன்னிறுத்தவே முதலில் எண்ணியது. ஆனால், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் வேட்பாளர் வரிசையில் அவரது பெயர் இடம்பெறாததால் தேசியப் பட்டியல் மூலம் அவர் எம்.பியாவது சட்டச் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. சட்டம் இடமளிக்குமானால் ஐ.ம.சு. கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவர் பதவியேற்று, அதன் பின் அவர் இராஜினாமாச் செய்து, அந்த இடத்துக்கு ரட்ணசிறி விக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து அவர் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னரே, அவர் சபாநாயகர் தெரிவில் பங்குபற்றமுடியும்.

எனவே, சட்டம் இடங்கொடுத்தாலும் நாடாளுமன்றம் முதன்முதலில் கூடியதும் முதலிரு நாள்களுக்குள் இடம்பெறப்போகும் சபாநாயகர் தெரிவுக்கு முன்பதாக ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றத்துக்குள் எம்.பியாகப் பிரவேசிப்பதற்குக் கால அவகாசம் இருக்காது.

அதேசமயம், அத்தகைய தெரிவுக்கு முன்பதாக அரசுத் தரப்பில் ஒருவர் இராஜினாமாச் செய்தால் அவரது இடத்துக்குப் புதியவர் ஒருவர் சபாநாயகர் தெரிவுக்கு முன்னர் நாடாளுமன்றத்துக்குள் எம்.பியாகப் பிரவேசிக்கமுடியாத இக்கட்டும் கால அவகாசம் போதாமையால் ஏற்படலாம். அத்தகைய நிலை ஏற்பட்டால், ஏற்கனவே அறுதிப்பெரும்பான்மையைப் பெறுவதற்காக மேலும் ஒரு சில எம்.பிக்களின் ஆதரவை நாடி ஓடித்திரியும் கூட்டமைப்பு அரசுக்கு அது மேலும் பலத்த நெருக்கடியைத் தந்துவிடும்.

எனவே, ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்குப் பதிலாகக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் டியூ குணசேகராவை சபாநாயகர் பதவிக்கு நிறுத்தக் கூட்டமைப்புத் தரப்புத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

அதேசமயம், ஐ.தே.முன்னணி தனது தரப்பு சபாநாயகர் வேட்பாளராக முன்னாள் அமைச்சர் லொக்கு பண்டாரவை நிறுத்த முடிவுசெய்துள்ளது.

தீவிர பௌத்தரான லொக்கு பண்டாரவை, தீவிரவாத பௌத்த போக்குடைய ஜாதிக ஹெல உறுமய ஆதரிக்கும் என்று நம்பப்படுகின்றது. அப்படி ஆதரிக்காவிட்டாலும் அவரை எதிர்த்து ஹெல உறுமய வாக்களிக்காது என்றும் கூறப்படுகின்றது.

அத்தகைய நிலைப்பாட்டில் ஜாதிக ஹெல உறுமய உறுதியாக இருக்குமானால் - இப்போதைய நாடாளுமன்றத்தில் கட்சிகளின் எண்ணிக்கை தொடர்பான அட்சரகணிதக் கணக்குப்படி - சபாநாயகர் பதவிக்குப் புதிய அரசு நியமிக்கும் வேட்பாளர் தோற்கடிக்கப்படுவது பெரும்பாலும் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அவ்வாறு தோல்வி ஏற்படுமானால் புதிய அரசுக்கு ஆரம்பமே அடிசறுக்குவதாக அமைந்துவிடும்.

# பணம் செலுத்தி 2 வருடங்களாகியும் மின்தூக்கிகள் பொருத்தப்படவில்லை

## யாழ். போதனா வைத்தியசாலையில் தொடரும் அவலம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ விடுதிகளில் மின்தூக்கிகள் 'லிப்ட்' பொருத்துவதற்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டு 2 வருடங்களாகியும் இன்னமும் மின்தூக்கிகள் பொருத்தப்படவில்லை.

வைத்தியசாலை நிர்வாக அதிகாரி எஸ்.பத்மநாதன் இதனைத் தெரிவித்தார்.

யாழ். வைத்தியசாலையில் மருத்துவ விடுதிகள் சிலவும் புதிய விடுதிகளும் 1999ஆம் ஆண்டு செயற்பட ஆரம்பித்தன. ஆனால், மூன்று மாடிகளைக் கொண்ட இந்த மருத்துவ விடுதிகளுக்கு இன்னமும் மின்தூக்கி வசதிகள் செய்யப்படவில்லை. இதன் காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இருதய நோயாளர்கள் பெரும் இன்னல்களுடன் படிகளில் ஏறி, இறங்கவேண்டிய நிலையில் உள்ளனர். நடக்க முடியாத கடும்நோயாளிகள் தள்ளுவண்டிலுடன் சிற்றூழியர்களால் தூக்கிச் செல்லப்படும் அவலமும் காணப்படுகின்றது.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாக அதிகாரி எஸ்.பத்மநாதனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது

இந்த வைத்திய விடுதிகளுக்கு மின்தூக்கி பொருத்த சுகாதாரத் திணைக்களம் எண்பது லட்சம் ரூபாவை மின்சார சபைக்கு வழங்கியுள்ளது. பணம் செலுத்தப்பட்டு 2வருடங்கள் கடந்துவிட்டது. இன்னமும் மின்தூக்கிகள் பொருத்தப்படவில்லை. இது விடயமாகப் பல தடவைகள் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பியும் பயனேதும் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்தார். (ம-3-5)

# நகர வீதிகளுக்கு விளக்குப் பொருத்த 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## 'நிக்கொட்' உதவுகின்றது

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வீதிகளுக்கும் தெரு விளக்குகள் பொருத்தப்படவிருக்கின்றன. இத்திட்டத்தைச் செயற்படுத்த 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் தெருவிளக்குகள் இல்லாததால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன என்றும் - களவு, கொள்ளைகள், வழிப்பறிகள் ஆகியன அதிகரிக்கின்றன என்றும் - பல்வேறு அமைப்புக்கள் யாழ். அரச அதிபரிடம் முறையிட்டுவந்தன.

இதைத் தொடர்ந்து அரச அதிபர் மின்சார சபை, மாநகர சபை ஆகியவற்றின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்திவந்தார்.

இதன் பயனாகத் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பிரகாரம் 'நிக்கொட்' அமைப்பினால் 70 லட்சம் ரூபா செலவில் நகர வீதிகளில் தெருவிளக்குகள் பொருத்தப்பட இருக்கின்றன.

இத்திட்டத்தின்கீழ் ஆயிரத்து அறுநூற்று எட்டு 'ரியூப்' லைட்டுகளும் நூறு சோடியம் லைட்டுக்களும் வீதிகளில் பொருத்தப்படவிருக்கின்றன.

தெருவிளக்குகள் அமைப்பதற்கான உபகரணங்களை மின்சார சபை கொள்வனவுசெய்து பொருத்தும் பணிகளை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்க இருக்கின்றன. (ம-3-5)

# கண்ணி அகற்றும் டெனிஸ் குழு அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடக்கு - கிழக்கில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டெனிஸ் கண்ணி அகற்றும் குழுவின் உயர்மட்ட அதிகாரிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை வருகின்றார்கள்.

அக்குழுவின் உயர்மட்ட அதிகாரியான நில்ஸ் தலைமையில் வரும் இந்த அதிகாரிகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் இவர்கள் பருத்தித்துறையில் கண்ணி அகற்றும் பணியைப் பார்வையிடுவர். மறுநாள் வன்னி செல்லும் அவர்கள் பூநகரிப் பகுதியில் கண்ணி அகற்றும் பணியைப் பார்வையிட்ட பின் வவுனியா, திருகோணமலை மாவட்டங்களுக்கும் செல்வர்.

டென்மார்க் றோட்டறிக் கழகத்தின் மாவட்ட ஆளுநராக நில்ஸ் பணிபுரிகின்றார். இலங்கை விஜயத்தின்போது அவர் கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் றோட்டோரியன்களையும் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றார். (ம-3)

## யாழ். குடாநாட்டில் செயற்படுத்தப்படும்

# 'நியாப்' திட்ட 2ஆம் கட்டம்; கொழும்பில் இருநாள் மாநாடு

யாழ்ப்பாணம்,ஏப்.16

குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் 'நியாப்' திட்டத்தின் 2ஆம் கட்டத்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக விசேட மாநாடு ஒன்று இன்றும் நாளையும் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அரச அதிபர் செ.பத்மநாதனும் 'நியாப்' திட்டப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணனும் கொழும்பு சென்றுள்ளனர்.

குடாநாட்டில் குளம் புனரமைப்பு, வடிகால் புனரமைப்பு, கிராம மக்களின் மறுவாழ்வு ஆகிய திட்டங்கள் 'நியாப்' மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முதற்கட்டமாக 4கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியில் இருந்து பெரும்பாலான பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. பல பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இதுவரை குளப் புனரமைப்புக்கு 2கோடியே 20லட்சம் ரூபாவும் வடிகால் மற்றும் கட்டட அமைப்புக்கு 20லட்சத்து 60ஆயிரம் ரூபாவும் மக்களின் மறுவாழ்வுக்கு 30லட்சத்து 60ஆயிரம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளன.

'நியாப்' திட்டத்தில் 2ஆம் கட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியன குறித்து இன்றும் நாளையும் இடம்பெறும் மாநாட்டில் ஆராயப்படும்.

இதேவேளை, 'நியாப்' வேலைகளின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற செய்துமுடிக்கப்பட்ட குளங்கள், உவர்நீர்த் தடுப்பு அணைகளைக் கையளித்தல், 2004 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட குளங்கள், உவர்நீர்த் தடுப்புகளின் புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றம் என்பன தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (ம-3-5)

# குடாநாட்டில் 5 கிராமங்களில் 'நிகொட்'டின் துரித அபிவிருத்தி

## ரூ. 3 கோடி 50 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 5 கிராமங்களைத் துரித அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் விருத்தி செய்வதற்கு சுமார் 3 கோடியே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதாக 'நிகொட்' திட்டப் பணிப்பாளர் கே.நவரட்ணராசா தெரிவித்துள்ளார்.

பொம்மைவெளி, அரியாலை கிழக்கு (பூம்புகார்), வரணி தாவளை இயற்றாலை, உடுத்துறை மற்றும் ஆழியவளை ஆகிய 5 கிராமங்களுமே இந்தத் துரித அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. ஒவ்வொரு கிராமத்தின் அபிவிருத்திக்கும் தலா 70 லட்சம் ரூபாவீதம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இந்தக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஐந்து கிராமங்களிலும் குடிதண்ணீர் விநியோகம், வீதி மற்றும் மலசல கூடங்கள் என்பன புனரமைக்கப்படவுள்ளன. பொதுமக்களுக்கான சுயதொழிற் பயிற்சி வழங்கல் மற்றும் சுழற்சிமுறைக் கடன் வழங்குதல் உட்பட பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் திட்டப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, 'நிக்கொட்'டின் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. (ம-5)

# கொல்களமாக மாறிவரும் வீதிகள்

மண்டைதீவு,ஏப்.16

மண்டதீவுக் கிராமத்தின் ஆள் நடமாட்டம் குறைந்த ஒதுக்குப்புற வீதிகளும், கை ஒழுங்கைகளும், கால்நடைகளை வெட்டும் கொல்களமாகத் தொடர்ந்து பாவிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உரிமை கோரப்படாத கட்டாக்காலி மாடுகளும் தனியாருக்குச் சொந்தமான பசுக்களுமே இவ்வாறு வீதிகளில் வைத்து இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன. சட்டவிரோதமான முறையில், சுகாதார அதிகாரிகளின் முன் அனுமதி இன்றி இந்தச்செயற்பாடு தொடர்கின்றது. இரவுநேரத்திலேயே மாடுகள் பெரும்பாலும் கொல்லப்படுகின்றன.

வெட்டப்பட்ட மாடுகளின் தலை, குடல், தோல், எலும்புகள் போன்ற கழிவுப்பொருள்கள் வீதிகளில் வீசப்பட்டுக் கிடப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. சில வேளைகளில் இறைச்சிக்கழிவுகள் கிணறுகளிலும் கொட்டப்படுகின்றன.

கழிவுகளை அகற்ற எவரும் முன்வராத காரணத்தால், வீதிகளிலும் அயல்புறங்களிலும் பெரும் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரக்கேடும் ஏற்பட்டுள்ளதாக இந்தப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்தவார இறுதியில் பாதிரிகோயிலுக்கு முன்னால் உள்ள வீதியில் கட்டப்பட்டிருந்த எருது மாடுகள் இரவு நேரத்தில் வெட்டப்பட்டதுடன் இறைச்சிக் கழிவுப்பொருள்கள், போக்குவரத்திற்குப் பாவிக்கப்படும் அந்த வீதியிலேயே போடப் பட்டிருந்தன.

இது தொடர்பாக அந்தக் கிராமத்தின் கடற்படைப் பொதுசனத் தொடர்பதிகாரி கமகேயிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

வெட்டப்படும் கால் நடைகளின் பிரதான உடற்பாகங்களான தொடை, ஈரல் போன்ற பகுதிகள் எடுக்கப்பட்டபின் பெருமளவிலான பகுதிகள் வீணாக விடப்படுகின்றன.

அத்துடன், விவசாயக் கிராமமான இந்தக் கிராமத்தின் வளம் கால்நடைகளிலேயே தங்கியுள்ளது. கால்நடைகள் வீணாக அழிக்கப்படுவதுடன் அல்லைப்பிட்டி போன்ற அயற்கிராமங்களுக்கும் இரவு நேரத்தில் அவை கடத்தப்பட்டு வருகின்றன.

கால்நடை வளத்தைக் காப்பாற்ற இந்தப்பகுதி மக்களோ அல்லது தீவக விவசாயப் பகுதியினரோ அதிகாரிகளோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-88)

## நாளை

சித்திரை 05
சனிக்கிழமை
(17.04.2004)
திதி : திரயோதசி
மாலை 6.22 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
முழுவதும்
சனிப் பிரதோஷ விரதம்
சுபநேரம்: 3.04 - 4.34
ராகுகாலம்: 9.04 - 10.34
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

ஒருவரது இனிய இயல்பு அவரின் உள்ளத்துக்கு அழகு.

## விசேட பொதுக்கூட்டம்

சிமெந்துக் கூட்டுத்தாபனம் சி.பொ.தொ. யூனியன் காங்கேசன்துறை

எதிர்வரும் (18.04.2004) ஞாயிறு காலை 9.30 மணியளவில் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் விசேட பொதுக் கூட்டம் நடைபெற இருப்பதால் சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சி.பொ.தொ.யூனியன்,
காங்கேசன்துறை. (30877)(34-14-21) - செயலாளர்.

## பிற்போடப்பட்டுள்ளது

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் 12-04-2004 அன்று நடத்தப்படவிருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு (26.04.2004) திங்கட்கிழமைக்குப் பிற்போடப் பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: 20001 முதல் 21900, 22401 முதல் 22500 வரையான சீட்டைகள் சீட்டிழுப்பில் தவிர்க்கப்பட்டுள்ளன.

சமுதாய முன்னேற்ற நிலையம்,
ஆராட்சியார் வளவு,
கொக்குவில் கிழக்கு. T.P.:077 6165 535. - ஏற்பாட்டாளர்கள். (30892)(34-21-14)

மாகாணப் பிரதிப் பணிப்பாளரின்
சுகாதார சேவைகள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

1. வாகனங்கள் சேவிஸ் செய்தல் - 2004
11. வாகனங்கள் திருத்தத்திற்கான உள்ளூர் நிறுவனங்களைப் பதிவுசெய்தல் - 2004

மேற்படி விடயங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. 22.04.2004 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள லாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 23.04.2004 முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக இவ்வலுவலகத்தில் வைக் கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி விண்ணப்பம் இத்தினம் 10.30 மணிக்குத் திறந்து ஆராயப்படும். வேறு விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
(C/34472) சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம். (34-21-14)

## மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி

சிறுப்பிட்டி கிழக்கு இளைஞர்கள் இணைந்து வழங்கும் மாட்டுவண்டில் சவாரிப்போட்டியொன்று நடைபெறவுள்ளது.

இடம்: நீர்வேலிச் சவாரித்திடல்
காலம்: 18.04.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00மணி

ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி. (30883) - ஏற்பாட்டாளர். (சிறுப்பிட்டி இளைஞர்கள் சார்பில்) (26-14-21)

## தேசிய ஆங்கில டிப்ளோமா

குழந்தைகள் தாய்மொழியைக் கற்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட 24 புத்தகங்கள் கொண்ட தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறிக்கான மொத்தக் கட்டணம்: ரூபா 500/= மட்டும். விண்ணப்பிக்க வேண்டிய முடிவு திகதி: 17.04.2004

மாதிரி விண்ணப்பம் (வேறு தாளில் பூர்த்திசெய்யவும்)

பெயர் :......................................
முகவரி :......................................
தே.அ.அ.இலக்கம் :......................................
தெரிவுசெய்யும் பாடநெறி (ஒன்றினைத் தெரிவுசெய்யவும்)
☐ ஆசிரியர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
☐ அலுவலர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
☐ பொதுத்தொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
☐ மாணவர்களுக்கான ஆங்கில டிப்ளோமா (8ஆம் வகுப்புக்கு மேல்)
திகதி :...................... ஒப்பம் :......................

விண்ணப்படிவம் மற்றும் **PSALMS TECHNOLOGIES** என்ற பெயருக்கு **DEHIWALA** தபாலகத்தில் மாற்றத்தக்கதான ரூபா 500 /= இற்கான காசுக்கட்டளையை அனுப்பவேண்டிய முகவரி:

**Psalm Institute of Engineering and Technology**
**22, 1/4, Galle Road,**
**Dehiwala.**

குறிப்பு :- 19-04-2004 இல் இருந்து பாடநெறிக்கான கட்டணம் ரூபா 1000/= ஆக அதிகரிக்கப்படுகின்றது. 19-04-2004 முதல் விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பத்துடன் ரூபா 1000/= இற்கான காசுக்கட்டளையை இணைத்து அனுப்புதல் வேண்டும். (C/34476) (21-14)


### உயிர்ப்பு ஞாயிறு தின விளையாட்டுப் போட்டி

குருநகர்,ஏப்.16

யாழ்.திருநகர் பாரதி சனசமூக நிலையம் உயிர்ப்பு ஞாயிறு தினத் தன்று விளையாட்டுப் போட்டிகளை யும் இசை நிகழ்ச்சிகளையும் நடத் தியது.

கபடி, கிரிக்கெட், கிறிஸ்மரம் ஏறுதல், கயிறுழுத்தல், பட்மின்ரன், சங்கீதக்கதிரை, தலையணை அடித் தல், சைக்கிள் ஓட்டம் ஆகிய போட் டிகள் நடைபெற்றன.

கடந்த 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை பாரதி சனசமூக நிலையத்தின் விளையாட்டுத் துறைத் தலைவர் என்.வசந்தகுமார் தலைமையில் இப்போட்டிகள் நடை பெற்றன.

இறுதி நாளான கடந்த 13ஆம் திகதி நிகழ்வில் வெற்றியீட்டி யோருக்கான பரிசளிப்பு வைபவமும் மாலை 7 மணிக்கு பாரதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற் றது.

எக்காளத்தொனிச் சபையின் போத கர்களான ஜேம்ஸ் தேவராஜா, எஸ். எஸ்ராக் ஆகியோர் பிரதம விருந் தினர்களாகக் கலந்துகொண்டனர். பரிசளிப்பு வைபவ முடிவில் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.(ம-8-51)

### தென்மராட்சியில் சமூக செயற்பாட்டுத் திட்டங்கள்

தென்மராட்சி,ஏப்.16

அகதிகளுக்கான ஐக்கிய நாடு கள் தூதுவராலய யாழ்.சமூக செயற் பாட்டு மையத்தினர், தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கெற்பேலி, பாலாவி, தவசிக்குளம், வரணி, கோவில்குடியிருப்பு ஆகிய பகுதி களில் இவ்வருடம் சமூக செயற்பாட் டுத் திட்டங்களை நடைமுறைப்படுத் தவுள்ளனர்.

கெற்பேலி, பாலாவி, தவசிக்குளம் ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த வித வைகள், இளஞ் சமூகத்தினிடையே சுயதொழில் முயற்சிகள் மேற்கொள் வதற்கான வேலைத் திட்டங்களை இனங்காண்பதற்கான ஆலோசனை கூட்டம் ஒன்று பாலாவி வடக்கு அத க.பாடசாலையில் நடைபெற்றது.

இப்பகுதிகளைச் சேர்ந்த மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியவை இக் கூட்டத்தில் கலந்துகொண்டு இப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தன. (ம-8-117)

### ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஏப்.16

இந்துசமய விவகார அலுவல் கள் அமைச்சின் யாழ்பிராந்திய அலு வலகம் நடத்தும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இதில் 'பாடும் பணி' எனும் தலைப் பில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். (ம-ரி)

### புத்தாண்டன்று 160 பேர் காயம்

கொழும்பு,ஏப்.16

சித்திரைப் புத்தாண்டு பிறந்த சில மணித்தியாலங்களில் நடைபெற்ற வெவ்வேறு விபத்துக் காரணமாக சுமார் 160 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட் டுள்ளார்கள்.

கொழும்பு, கண்டி, அனுராதபுரம், காலி, வலப்பிட்டிய, உடுவுரை, நுவ ரெலியா, பதுளை ஆகிய பிரதேசங் களிலேயே இந்த விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

காயமடைந்தோரில் அதிகமானோ கொழும்பை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் 109 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலை யிலும் அவசரப் பிரிவிலும் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

இதில் 60 பேர் வாகன விபத்து களில் காயமடைந்துள்ளார்கள். ஏனை யோர் மதுபோதையில் ஏற்பட்ட தக ராறு, வீட்டுத் தகராறுகளில் காய மடைந்தவர்கள் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவ சரச் சிகிச்சைப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜெயசிங்க தெரி வித்தார்.

கடந்த இரு தினங்களில் சுமார் 338 பேர் கொழும்பு தேசிய வைத் தியசாலையின் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளார்கள். (ம-ரி)


## வேகம் விவேகம் அல்ல!

சாரதி பயிற்சியளிப்பதில் 25 வருட அனுபவம் பெற்றவர்களிடம்
வான் சாரதி பயிற்சி பெற 30 நிமிடங்களுக்கு
ரூபா: 400/= 30.04.04 வரை

பெண்களுக்கு பெண்களே பயிற்சியளிப்பர்

தொடர்பு: S.V. குணபாலன்
239, பிரதானவீதி, யாழ்ப்பாணம், தொ.பேசி: 2225844

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
அரியரட்ணம் அமுதம்மா
(அமுதம்)



மலர்வு 20-09-1921 உதிர்வு 26-04-2003

ஆண்டொன்று ஓடிமறைந்தது
ஆனால் மறக்கவில்லை நாம் என்றும்!

வர்த்தலைவிளான்,
தெல்லிப்பழை. (30837) (26-21-14)

என்றும் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 06 - 10 - 1946



உதிர்வு 16 - 04 - 1997

அமரர் கனகன் தங்கராசா
(இ.போ.ச. நடத்துநர்)

நெஞ்ச மலர் வாடுதே - உங்கள்
நேச மொழி கேளாது!

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள், பேரன்,
பேர்த்தி, மாமன், மாமி.

வல்லை வீதி,
தொண்டைமானாறு. (30869) (26-14)

## நெஞ்சை விட்டகலாத ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 06 - 05 - 1940



சிவன் பாதம் 23 - 04 - 1998

அமரர்களான சின்னத்தம்பி - புனிதவதி
தம்பதிகளின் மூத்த புதல்வன்

அமரர் சோமசுந்தரம்
(பிரபல வர்த்தகர்)

திதி: 16.04.2004 வெள்ளிக்கிழமை

கணவனாய் வாழ்வு தந்து
அன்போடும் பண்போடும் வாழ்ந்து
மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே!
உங்களது உடல் மட்டும்
எம்மை விட்டு அகன்றதே தவிர
உள்ளமும் உருவமும்
எம்மிடந்தான் தொடர்ந்திருக்கும்!
இன்றுடன் ஆறு ஆண்டுகளானாலும்
எங்கள் துயரம் மாறாது
சொல்லாமல் சென்றீர்கள் சுவர்க்கத்தை
நோக்கி!
என்றும் உங்கள் ஆசிவேண்டி நினைவுடன்
நித்தம் வாழும்

அ.மி.பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

அன்பு மனைவி:
திருமதி ம.சோமசுந்தரம் குடும்பத்தினர்.

# லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் நாயகம் பேர்ட்டி வீரக்கோன் பதவியிலிருந்து விலகல்

கொழும்பு,ஏப்.16

பேர்ட்டி வீரக்கோன் லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து விலகியுள்ளார். அவர் தமது ராஜினாமாக் கடிதத்தினை அக்கட்சியின் அரசியல் குழுவிடம் சமர்ப்பித்திருந்தார்.

கட்சியின் அங்கத்தவர் ஒருவர் அரசியல் பீடத்தின் அனுமதி இல்லாமல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அமைச்சுப் பொறுப்பை ஏற்றதே அவரது தீர்மானத்திற்குக் காரணம் என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குத் தாம் ஆதரவு தெரிவித்தாலும் கூட லங்கா சமசமாஜக் கட்சி அதில் அங்கத்துவம் பெறுவதைத் தாம் விரும்பவில்லை என பேர்ட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

அரசியல் அரங்கில் 50 ஆண்டு கால அனுபவத்தைப் பெற்ற மூத்த, பழுத்த அரசியல்வாதியான அவர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சராகக் கடமையாற்றினார். (ம-ரி)

## மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா அடுத்த மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இரண்டு ஆண்டுகளைக் கொண்ட மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமாக் கற்கை நெறி அடுத்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற ஒருவருட கால மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்தவர்களில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள ஒரு தொகுதியினரே மேற்படி கற்கைநெறியை மேற்கொள்ளவுள்ளனர்.

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினம் இனறாகும். (எ-6)

# வலய அடிப்படையில் நீதிமன்றம் நிறுவ ஆணைக்குழு ந[illegible]டிக்கை

கொழும்பு,ஏப்.16

நாடு முழுவதும் வலய அடிப்படையில் நீதிமன்றங்களை நிறுவ நீதிச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

சிவில் மற்றும் குற்றவியல் தொடர்பான மேன்முறையீடுகளைத் துரிதமாக விசாரிப்பதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரும் பிரதம நீதியரசருமான சரத் என்.சில்வா தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மூலம் தற்போது நடத்தப்பட்டு வரும் நடமாடும் விசாரணை முறை வலய மட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் மேன்முறையீட்டு வழக்குகளை சம்பந்தப்பட்டவர்கள் வசிக்கும் வலயத்திலேயே விரைவாக முடித்துக்கொள்ள வசதி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-ரி)

# நூலகங்களைத் தரப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடக்கு கிழக்கில் உள்ள பொது நூலகங்களை தரப்படுத்தும் நடவடிக்கைகள் அரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி மேற்கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 72 உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் பொதுநூலகங்களே தரம் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக நூலகங்களின் தரங்களை அறியும் பொருட்டு ஒவ்வொரு நூலகம் தொடர்பான நூலகவளம், நூலக சாதனங்களை ஒழுங்குசெய்தல், முக்கிய பிரிவுகளும், சேவைகளும், வாசகர்கள் எண்ணிக்கை, நூலக முகாமைத்துவம், வருடாந்த மானியம், நூலக நேரம், நூலகக் குழு முதலிய விவரங்களை படிவங்கள் மூலம் சேகரிக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார்.

மேற்படி விவரங்கள் கிடைக்கப் பெற்றதும் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைச் சபை அதிகாரிகள் கொண்ட குழு பரிசோதனை செய்யும் என்றும் -

இதன் அடிப்படையில் பொது நூலகம் அதியுயர் தரம், தரம் I, தரம் II, தரம் III என்ற அடிப்படையில் தரச்சான்றிதழ் வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில்தான் எதிர்காலத்தில் உள்ளூராட்சி ஆணையாளரினால் நூலகங்களுக்கான மானியம விசேட பதவிப்பணிகள் மற்றும் ஆளணிகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-185)

## வங்கிகளில் புதுவருட நிகழ்வுகள்










இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை, வர்த்தக வங்கியின் யாழ். கிளை, தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை, மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக்கிளை ஆகியவற்றில் புதுவருடத்தை யொட்டி நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கொடுக்கல் வாங்கலின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்.)*

# இரண்டு கோடி ரூபா பெறுமதியான கஜமுத்துக்கள் பொலீஸாரிடம் சிக்கின

கொழும்பு,ஏப்.16

யானைத் தந்தங்களிலிருந்து கிடைக்கும் கஜமுத்துக்களைப் பேலியகொடைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். அவற்றின் பெறுமதி இரண்டு கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பௌத்த பிக்கு போன்று வேடமிட்ட ஒருவர் உட்பட ஆறுபேரைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

பேலியகொடைப் பொலீஸ் பிரிவிலிருந்து சென்ற விசேட பொலீஸ் குழுவொன்று இந்த நபர்களையும் கஜமுத்துக்களையும் களனி மற்றும் அம்பாறைப் பகுதியில் வைத்துக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கெசல்வத்த என்ற இடத்தில் ஒரு பெண் கஜமுத்து விற்பனையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து முத்து வாங்குபவர்கள் போல இரு பொலீஸார் அப்பகுதிக்குச் சென்றதாகவும், களனியில் உள்ள பௌத்த பிக்குவிடம் செல்லும்படி அப் பெண் தெரிவித்ததாகவும் அங்கு சென்றபோது ஒரு வீட்டிலிருந்து ஏராளமான கஜமுத்துக்களைக் கைப்பற்றியதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த இருவரும் வழங்கிய தகவலின் பேரில் அம்பாறையிலும் 40 முத்துக்களைக் கைப்பற்றியதுடன் 4 சந்தேக நபர்களையும் கைதுசெய்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ப-8)

# கைதடிச் சந்தியில் புதிதாக எரிபொருள் விற்பனை நிலையம்

## பல நோ.கூ.சங்கம் ஏற்பாடு

அரியாலை,ஏப்.16

கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கைதடிச் சந்திப் பகுதியில் புதிதாக எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தை நிறுவுவது தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தாம் விண்ணப்பித்திருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டுத்தாபனத்தின் அனுமதி பெறப்பட்டதும் எரிபொருள் விற்பனை நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-17)

## கற்றல் செயற்பாட்டிற்கு எழுச்சிப்பேரவை உதவி

கோப்பாய்,ஏப். 5

இருபாலை கிழக்கில் வசிக்கும் வசதி குறைந்த மாணவர்களின் மேலதிக கற்றல் செயற்பாட்டிற்கென கோப்பாய்த் தேசிய எழுச்சிப் பேரவையினரால் பெற்றோமாக்ஸ், அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இருபாலை கிழக்கு உதயதாரகை சனசமூக நிலையம் இதனைப் பொறுப்பேற்று உரியவர்களுக்கு வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-72)

காத்தான்குடியில் கைதுசெய்யப்பட்ட

# கருணா குழுவினர் நால்வருக்கு இரு வாரங்களுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,ஏப்.16

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பொலீஸ் சோதனைச்சாவடியில் கடந்தமாதம் 27ஆம் திகதி கைக்குண்டுகள், துப்பாக்கிரவைகள் சகிதம் கைதுசெய்யப்பட்ட கருணா அணியைச் சேர்ந்த நால்வரை மேலும் இரு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

ச[illegible]சு மாஸ்ரர் என்றழைக்கப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன், மயூரன என்றழைக்கப்படும் சாமித்தம்பி ராஜன், மனோகரன் என்றழைக்கப்படும் வேலாப்போடி வரதகுமார், குருபரன் என்றழைக்கப்படும் அரசமணி ஆகியோரின் விளக்கமறியல் காலமே நீடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த நால்வரையும் இம்மாதம் 27ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ம-ரி)

# கல்வியியற் கல்லூரி இறுதிப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி நாளை

## 27ஆம் திகதிவரை தொடரும்

வலி.தெற்கு,ஏப்.16

தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் நடைபெற்ற இறுதிப் பரீட்சையின் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நாளை சனிக்கிழமை முதல் 27ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் மகரகம தேசியக் கல்வி நிறுவகத்தில் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இப்பணிகளில் ஈடுபடுவதற்கென யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த 16 விரிவுரையாளர்கள் மகரகம செல்லவுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற இறுதிப் பரீட்சை எழுதிய ஆசிரிய மாணவர்களின் விடைத்தாள் களே மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

அதேசமயம் -

2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தமது கற்கைநெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள், கல்வி அமைச்சினால் வழங்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

இவர்களுக்கான நியமனங்களுக்கு உரிய நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் மே மாத முற்பகுதியில் இடம்பெறும் எனவும் தெரியவருகின்றது.

ஆசிரிய நியமனங்களின்போது அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளுடன் ஒவ்வொரு மாணவர்களதும் தனிப்பட்ட ஒழுக்கம், அவர்கள் மேற்கொண்ட சமூக சேவைகள், கல்வி தொடர்பான செயற்றிட்டங்கள், பாடசாலைகளில் நடைபெற்ற பயிற்சிக் காலங்களில் அவர் ஆற்றிய சேவைகள் போன்ற பல்வேறு விடயங்களும் பரிசீலிக்கப்பட்டே இம்முறை நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (ம-152)

## கொடிகாமம் பாடசாலை வீதி திருத்தப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.16

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலிருந்து கொடிகாமம் சந்தி வரைக்குமான பிரதான வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

இதனால், அந்த வீதியூடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் தகந்தையா தெரிவித்துள்ளார்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகள் காரணமாக மிக மோசமாகச் சேதமடைந்த இந்த வீதியின் ஏனைய பகுதிகள் புனரமைக்கப்பட்டபோதிலும் குறிப்பிட்ட இந்த வீதிப் பகுதி புனரமைக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (எ-6)

### தென்மராட்சி கிழக்கு
### பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்

## பிரதம சங்கக் கட்டடங்கள் மை பூசுதல் கூலிக்கான கேள்வி கோரல்

எமது சங்கத்தின் பிரதம சங்கக் கட்டடங்கள் மை பூசுதல் வேலை செய்வதற்கான கூலிக்கேள்வி தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகிறது. மை பூசுதல் கூலிக்கு கேள்வி கோர விரும்புபவர்கள் தமது கேள்விகளை பிரதம சங்கக் கட்டடங்களை பார்வையிட்டு, விண்ணப்பப்படிவத்தை ரூபா 25/= செலுத்திப் பிரதம சங்கத்தில் பெற்று 30.04.2004 ஆம் திகதிக்கு முன் *கேள்விகள், பொது முகாமையாளர், தென் கிழக்கு ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் *பிரதம சங்கக் கட்டடம் மை பூசுதல் கேள்வி* எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

தென் கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
2004.04.14 (C/34471)(40-14-19-30)

**சி.யோகேந்திரா**
பதில் பொது முகாமையாளர்.

## கைதடி இல்ல முதியோருக்கு மதிய உணவு

யாழ்ப்பாணம்,ஏப்.16

கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு இராணுவத்தின் 521 ஆவது படையணித் தலைமையகத்தினால் புதுவருடப் பிறப்பையொட்டி கடந்த திங்கட்கிழமை மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 52 ஆவது படையணியின் தளபதி, 521 ஆவது கட்டளை அதிகாரி உட்பட பல இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்கு இல்லத்தின் பணிப்பாளர் மற்றும் ஊழியர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

வயோதிபர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டதாகவும் பலாலியில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

### தென்மராட்சி கிழக்கு
### பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்

## வெற்றுப்பை விற்பனைக்கான கேள்வி கோரல்

எமது சங்கத்தில் பதினையாயிரத்திற்கும் (15,000) மேற்பட்ட வெற்றுப் பைகள் விற்பனைக்கு உள்ளன. கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை 30.04.2004 ஆம் திகதிக்கு முன்னர், *'பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூ.சங்கம், கொடிகாமம்'* என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் *'வெற்றுப் பை கேள்வி'* எனக் குறிப்பிடப்படல் வேண்டும். வெற்றுப் பைகளை பிரதம சங்கத்தில் பார்வையிடலாம்.

தென் கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.
14.04.2004. (C/34470)(38-14-19-30)

**சி.யோகேந்திரா**
பதில் பொது முகாமையாளர்.

## நெஞ்சகலாத நினைவஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மண்ணில் 03 - 06 - 1932



விண்ணில் 16 - 03 - 2004

## அமரர் செல்லத்துரை இரத்தினம்

கடந்ததோ மாதமொன்று என்றாலும் நாம்
இழந்ததோ பலநூறு சௌபாக்கியங்களை – அம்மா
கிடைக்குமோ உன்முக தரிசனம் எமக்கு இனி
பெற்றோமே உனது ஆத்மசாந்திக் கிரியையில் சாந்தி!

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.04.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருமகன்மார்: **சி.அபிமன்னன், நா.குணசிங்கம், மு.மோகனசிறி**
மருமகள்மார்: **இராசமலர், நிர்மலா**
பிள்ளைகள்: **திருச்செல்வம், ரஞ்சிதமலர், இராசமலர், நேசமலர், மோகனசெல்வம்.**

*'மலர்வாசம்',*
*கோயில் வீதி,*
*மல்லாகம்.*
(30778)(26-14-19-30)

## SUBRA (14)
சித்தன்கேணி.

**விசேட வகுப்பு**

மின் ஒளியில்
கணிதம் | ஆங்கிலம்
ஆரம்பிக்கின்றது.

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
★ தனிப்பட்ட கவனம் எடுக்கப்படும்.
★ தினமும் மாலை 6 - 8 வரை வகுப்புகள்

(C/34097)

## கிறிஸ்ரல் சென்ரர்
## நெல்லியடி

### G.C.E.A/L-2004

பொதுச் சாதாரண பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
த.துவசேகர்
**ஆரம்பம்: 16,17,18 திகதிகளில்**
**p.m. 3.00 மணி**

**A/L 2006** கணித, விஞ்ஞான பிரிவு
ஆரம்பம்: 18.04.2004 மு.ப.10.30

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 1922 - 02 - 10



உதிர்வு 2003 - 04 - 25

## திருமதி அமுதம்மா அரியரட்ணம்

அம்மா அப்பம்மா சொல்லாதே நீ சொல்லம்மா
பலகாரம் தரும் கையைப் பாழாக்கியதாரோ?
பாலறுகு வைக்குங் கையைப் பாடையில் கண்டதேனோ?
மூன்றாம் உனது பேரன்மார் முதுகெலும்பாயிருக்க
நான்காம் பேரனாக எனை நீ ஏற்றதேனோ?
துறவறம் பூண இருந்த என்னைத் துன்பமதுவெனக் கூறி
இனிதாய் இல்லறம் நடத்தி இன்பமெல்லாம் அனுபவியென்று
வாயார வாழ்த்தி என்னை உனக்கு வாய்க்கரிசி போடவைத்தாய்
ஆண்டு ஒன்று ஆனாலும் ஏகுமென்ற காரியம்
ஆகவில்லை என்றபோது ஆண்டவனை நீ கேளு
மண்ணுலகம் நான் சென்று மன்றாடிக் கேட்டேனும்
'விட்டதை முடித்துவர விடடா எனை' என்று
பட்சமாய் நீ கேட்டதை நான் முடிக்க
பட்ட துன்பம் போதுமம்மா பரிந்து வழி கூறனம்மா?

*106 B,அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (30865)(14-19-30)

என்றும் உன்னை மறவாத பேரன்:
**செ.சந்திரமோகன்.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்

## வ.இ.நடனசிகாமணி (மணியண்ணா)

**(கொரனேசன் ஸ்ரோர் உரிமையாளர், நியூசிட்டி ஜுவலரி பங்குதாரர், திருகோணமலை)**



| அன்னையின் மடியில் | மண்ணின் மடியில் |
| --- | --- |
| 29.05.1928 | 09.05.2002 |

**திதி:16.04.2004**

வெள்ளிகள் வீழ்வது விடியலுக்காய் ஐயாவே
நீங்கள் ஏன் வீழ்ந்தீர்கள்
விடை தெரியாமல் வாழ்கின்றோம் உங்கள் நினைவோடு
ஆண்டுகள் இரண்டென்ன எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்
மறவோம் உங்கள் பணியை! நீதியாய், நேர்மையாய்
நீங்கள் நடந்த பாதையில் நாமும் நடக்கின்றோம்.
உங்கள் பாதச்சுவடுகளைப் பின்பற்றி!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
கொரனேசன் ஸ்ரோர், நியூசிட்டி ஜுவலரி ஊழியர்கள்.

வல்வெட்டித்துறை.

T.P : 0777-174182

# இளைஞர், யுவதிகளை தேசநிர்மாணப் பணிக்கான உழைப்பாளர்களாக மாற்றுவதே எமது திட்டம்



நாடாளுமன்றத்தில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி தமிழீழத்தில் இருக்கின்ற இளைஞர், யுவதிகளை தேச நிர்மாணப் பணிக்கான உழைப்பாளர்களாக மாற்றுவதே எனது திட்டம்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் உதயனுக்கு அளித்த செவ்வியிலே தெரிவித்துள்ளார்.

அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் முழுவிவரம் வருமாறு:

***கேள்வி:*** நாடாளுமன்ற உறுப்பினரானதன் மூலம் என்ன சாதிக்கப் போகிறீர்கள்?

***பதில்:*** ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மத்தியில் நீண்டகாலமாக வேலை செய்துள்ளோம். நாடாளுமன்ற உறுப்பினராக வந்ததன் மூலம் அந்த சேவையைத் தொடர்ந்து செய்வதற்கான அங்கீகாரம் எமக்குக் கிடைத்துள்ளது.

ஏற்கனவே நாங்கள் கிராம மட்டங்களில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பல வேலைத் திட்டங்களைச் செய்து பெண்களை ஆளுமை உள்ளவர்களாக மாற்றி உழைப்பாளர்களாக உருவாக்கி இருக்கிறோம். இப்போது இந்த வேலைத் திட்டங்களைப் பாரிய அளவில் தமிழீழம் எங்கும் மேற்கொள்வதற்கான அதிகாரம் எமக்குக் கிடைத்துள்ளது.

நாடாளுமன்றத்தின் மூலம் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி மிக வேகமாகத் தமிழீழத்தில் இருக்கின்ற இளைஞர், யுவதிகள் மத்தியில உள்ள திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களை உழைப்பாளர்களாக மாற்றி தேச நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்துகின்ற அதேநேரம், நாட்டின் தலைமைத்துவம் வாய்ந்தவர்களாக அவர்களை மாற்றுவதுதான் என்னுடைய திட்டம்.

நாடாளுமன்றத்திலே கிடைக்கின்ற அதிகாரங்கள் மற்றும் வளங்களை மிகவும் கவனமாகப் பயன்படுத்தி, அந்தத் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

***கேள்வி:*** புதிய அரசுக்கு ஆதரவு வழங்குவீர்களா?

***பதில்:*** நாடாளுமன்றத்தில் யாருக்கு ஆதரவு அளிப்பது அல்லது ஆதரவளிக்காது விடுவது என்பது அல்ல எமது பிரச்சினை. எங்களால் தேர்தல் காலத்தில் முன்வைக்கப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதுதான் எமது முக்கிய இலக்கு. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல நாங்கள் ஒரு தனித் தேசிய இனமாக எமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும். விடுதலைப் புலிகள்தான் எமது ஏக பிரதிநிதிகள். அவர்களுடன் பேச்சு நடத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அவர்களிடம் வழங்கவேண்டும். இதுதான் எமது இலக்கு. அதற்காகத் தமிழரசுக் கட்சி சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து நின்று ஒரே குரலையே வெளிப்படுத்துவோம்.

**செவ்வி: வசந்தன்**

எமது இலக்கினை நிறைவேற்ற யார் முன்வருகின்றார்களோ அவர்களுக்குத்தான் நாம் ஆதரவளிப்போம். ஆனால், சிங்களப் பேரினவாத அரசியல் தலைவர்கள் தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கவோ அல்லது எமது கோரிக்கைகளை நிறைவேற்றவோ முன்வரமாட்டார்கள்.

எமது இலக்கை அடைவதற்கு புதிய அரசு எமக்கு ஆதரவு வழங்குமாக இருந்தால் அவர்களுடன் நாம் பேசுவோம். எமது தலைமைக்கு நாம் முற்றிலும் ஆதரவாக இருந்து அவர்களுடைய கொள்கைகளுக்கு வலுச் சேர்ப்போம்.

தற்போது புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அரசு தமிழர் பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் பேசவேண்டும். வேறு எந்த மாற்றுக் கட்சிகளுடனும் பேசக்கூடாது. அவ்வாறு பேசுவதற்கு அரசு முன்வராவிட்டால் நாடாளுமன்றக் கதிரைகளிலிருந்து நாம் விலகுவதைத் தவிர வேறு வழியில்லை.

நாடாளுமன்றத்திற்கு நாம் செல்லும் முக்கிய நோக்கம் தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு தலைமையின் கீழ் பலமாக நிற்கின்றார்கள் என்ற செய்தியை சர்வதேசத்திற்கு சொல்லுவதற்காகவே. கதிரைகளுக்காகவோ, அமைச்சுப் பதவிகளுக்காகவோ நாம நாடாளுமன்றம் செல்லவில்லை. மக்களை ஒன்றிணைத்து புலிகள்தான் ஏகபிரதிநிதிகள் என்பதனை வலுவடையச் செய்யும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்குத் தொடர்ந்தும் குரல் கொடுப்போம். ஏற்கனவே, இத்தகைய வேலைத் திட்டங்களை நான் அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் செய்துவந்தேன். எம்மால் முன்னெடுக்கபட்ட பொங்கு தமிழ் நிகழ்வில் பல லட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றினர். இன்றைய தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது தெற்கில் ஒரு பிளவுபட்ட மக்களின் சிந்தனைக் குழப்பத்தை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. ஆனால், வடக்கு - கிழக்கில் பிரதேச வாதத்தை முன்வைத்த போதும கூட மக்கள் ஒன்றுபட்டு ஒரு கொள்கையில் நிற்கின்றோம் என்பதைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளனர். அதனை மேலும் மேலும் உறுதியாக்குவதுதான் எம்முடைய முக்கிய பணி.

விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள். அதனடிப்படையில்தான் மக்கள்ஆணை பெற்று நாடாளுமன்றம் செல்லுகின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுடன் மட்டும்தான் பேச்சு நடத்தப்படவேண்டும். அதனை நாடாளுமன்றத்தில் அழுத்திக்கூறுவோம்; இடித்துரைப்போம்.

எமது கூட்டுக்குள் எத்தகைய முரண்பாடுகளும் தற்போதும் இல்லை; எதிர்காலத்திலும் ஏற்படப்போவதில்லை. எமக்கு எவ்வளவோ அச்சுறுத்தல்கள் இருந்தாலும் வடக்கு - கிழக்கில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரே கொள்கையின் அடிப்படையில் இணைந்து செயற்படுவதாக திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

சிங்களப் பேரினவாதம் தமிழர்களின் பலத்தை உடைப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டது. இந்த முயற்சிகள் பற்றி சர்வதேசத்திற்கு விளங்காமல் இருந்து வந்தது. அதனை நாம் ஆதாரபூர்வமாகத் தெளிவாக்குவோம்.

***கேள்வி:*** சிங்கள மக்கள் சமாதானத்திற்கு எதிரான சக்திகளுக்குத்தான் வாக்களித்துள்ளனர் என்பதை தேர்தல் முடிவுகள் கோடிட்டுக்காட்டுகின்றன. இது தொடர்பாகத் தங்களின் கருத்து?

***பதில்:*** சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்கள் மத்தியில் இன்னும் தெளிவான சிந்தனைகள் ஏற்படவில்லை. குழப்பத்தில்தான் அவர்கள் இவ்வாறு மாறி வாக்களித்துள்ளனர். அதுமட்டுமல்லாது பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய சிங்கள மக்கள் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி அற்ப, சொற்ப சலுகைகளுக்காகவும் வாக்களித்திருக்கலாம்.

தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு நீண்டகாலம் நிலைத்திருக்கும் என்று நான் நம்பவில்லை. ஆட்சியில் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளிடையே பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாக நாம் அறிகின்றோம். பல கொள்கை முரண்பாடுகளும் உள்ளன. சிங்கள மக்களும் குழம்பிப் போயுள்ளனர்.

***கேள்வி:*** மகளிர் பிரச்சினைகளை முன்னெடுப் பதற்கு எந்தவித செயற்பாடுகளை முன்னெடுக்கப் போகிறீர்கள்?

***பதில்:*** பெண்கள் மிகவும் ஒடுக்கபட்டுள்ளார்கள். இராணுவ நெருக்கடிகளால் தமிழ்மக்கள் எல்லாரும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும் பெண்களும் குழந்தைகளும்தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள், அந்தப் பாதிப்புக்களில் இருந்து அவர் விடுபடவில்லை.

பெண்களிடம் நிறையத் துயரங்கள் உண்டு. அதனை மனதுக்குள் பூட்டி வைத்துள்ளனர். அவர்களுடைய துன்ப, துயரங்களைக் கேட்டு அவர்களுடைய துன்பங்களை ஆற்றுவதற்கான களங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். நாங்கள் அரங்குகளில் வேலை செய்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுடைய பிரச்சினைகளை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அதன் அடிப்படையில் அவர்களுடைய துயரங்களைத் துடைப்பதற்கு எமது அரங்கச் செயற்பாட்டின் மூலம் களம் அமைத்துக் கொடுக்கவுள்ளோம்.

ஒவ்வொரு பெண்களிடமும் பல்வேறு திறமைகள் உண்டு. தமது துன்ப, துயரங்களில் இருந்து விடுபட்ட பெண்கள், தமது திறமைகளை வெளிக்காட்டுவார்கள். அதனை மேலும் வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்குவோம். திறன்களை வளர்க்கும் பள்ளிகளைத் தமிழீழம் எங்கும் பரவலாக அமைத்து அவற்றின் மூலம் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்பின், அவர்கள் உழைப்பாளிகளாவர்கள். தேச நிர்மாணப் பணியை ஆற்றக்கூடிய - தேசியத்தில் பற்றுக் கொண்ட - உழைப்பாளர்களாக அவர்கள் மாறுவார்கள். அந்த உழைப்பாளர்கள் ஊதியம் பெறும் உழைப்பாளர்களாகவும் தேசநிர்மாணப் பணிகளில் ஈடுபடுபவர்களாகவும் வருவார்கள்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னம்பிக்கை உள்ள உழைப்பாளர்களாக வரும்போது பொருளாதாரப் பிரச்சினை தீரும். அதனால் குடும்பங்களில் சந்தோசம் நிலவும். அதன்மூலம் கிராமங்கள் சந்தோசமடையும். இதனால் தமிழ்த்தேசமெங்குமே சந்தோசத்தினால் மிளிரும். இதன்மூலம் ஒரு சுபீட்சமான தமிழ்த்தேசியத்தைக் கட்டி வளர்க்க முடியும். இதுதான் எமது திட்டம்.

***கேள்வி:*** சர்வதேச மகளிரின் ஆதரவைப்பெற முயற்சிப்பீர்களா?

***பதில்:*** எமது மண்ணில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கும் எனக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உண்டு. நாங்கள் எமது அபிலாசைகளை உலகிற்கு எடுத்துச்சொல்கின்றபோது அந்த உணர்வோடு அவர்களும் கலந்துகொண்டார்கள். உதாரணமாக, நாங்கள் இங்கு பொங்கு தமிழ் போன்ற நடவடிக்கைகள் மூலம் எமது அபிலாசைகளை முன்வைத்தபோது அங்குள்ள மக்களும் தாங்கள் தாங்கள் வாழும் நாடுகளிலே பொங்கு தமிழ்களை நடத்தி எமது உணர்வுகளோடு கலந்து கொண்டார்கள். அவ்வாறான உணர்வுச் சங்கமங்கள் எம்மிடையே ஏற்கனவே இடம்பெற்றுவந்தன. அந்த சங்கமம் தற்போது கிடைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் மேலும் வலுப்பெறும்.

அதன்மூலம், சர்வதேச நாடுகளில் வாழும் எமது உறவுகளின் ஆதரவைப் பெற்று தமிழ்மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுப்போம்.

***கேள்வி:*** பெண்கள் மத்தியில் பாதிப்புக்கள் உண்டு. அவற்றை வெளிக்கொணர வேண்டும் என்ற உந்துதல் உங்களுக்கு எவ்வாறு ஏறபட்டது?

***பதில்:*** நாங்கள் அரங்க செயற்பாட்டுக்குழுவாக ஏற்கனவே இயங்கி வந்துள்ளோம். இந்த அரங்கச்செயற்பாடுகள் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலேயே இடம்பெற்று வந்தது. 1995 இற்குப் பின் நாங்கள் சின்னாபின்னமாகத் தூக்கி எறியப்பட்டபோது எந்த இடங்களில் சென்று வாழ்ந்து வந்தோமோ அந்த இடங்கள் எல்லாவற்றிலும் அரங்கச்செயற்பாட்டுக் குழுக்களை அமைத்தோம். திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற இடங்களில் இந்தக்குழுக்களை அமைத்து ஆங்கங்கே இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் அவர்களுடைய தகவல்களை பரிமாறிக் கொள்வதற்குக் களமெடுத்துக்கொடுத்தோம். அவ்வாறு வேலை செய்து கொண்டுசெல்லுகையில் பெருமளவானோர் எம்முடன் இணைந்து செயற்பட முன்வந்தனர்.

ஆரம்பக்காலங்களில் எமது

(08ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற யாழ். மாவட்ட பெண் உறுப்பினர் தெரிவிப்பு

## இந்தத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள்

# விழிப்போடும், உணர்வோடும் இருந்து வாக்களித்துள்ளார்கள்

## நன்றி கூறுகிறார் சிவனேசன் எம்.பி.



கரவெட்டி,ஏப்.16

கடந்தகாலத் தேர்தல்களைப் போலல்லாமல் இம்முறை தமிழ் பேசும் மக்கள் மிக விழிப்போடும் உணர்வோடும் இருந்து வாக்களித்துள்ளார்கள். அந்தவகையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள நான் தமிழ்பேசும் மக்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவ்வாறு அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய கி.சிவநேசன் உதயனுக்கு அளித்த செவ்வியில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

நடந்து முடிந்த பதின்மூன்றாவது இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழீழ மக்கள் சார்பில் நின்று வெற்றியீட்டிய நாடாளுமன்ற உறுப்பினருள் நானும் ஒருவன் என்கின்ற முறையில் எம்மக்களுக்கு எனது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டிய தேவை எனக்கிருக்கின்றது. இந்தத் தேர்தலில் யாழ். மாவட்டத்திலேயே மிக அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தமிழ்க் கூட்டமைப்பு 8 ஆசனங்களைப் பெற்றிருப்பது தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை மக்கள் வலுப்படுத்தியிருக்கின்றார்கள் என்பதை சர்வதேச அரங்கிற்கு வெளிக்காட்டி நிற்பதாகவே நான் கருதுகின்றேன். கடந்த கால தேர்தல்களைவிட இந்தப் பதினமூன்றாவது தேர்தலிலே மக்கள் மிக விழிப்புணர்ச்சியுடன் இருந்திருக்கின்றார்கள். இந்த மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே தங்களுடைய விடுதலையை - தங்களுடைய சுதந்திரத்தை - பெற்றுத் தருவார்கள் என்கின்ற நம்பிக்கையில் உணர்வோடு எழுந்து இந்தத் தேர்தலிலே தீவிரமான பங்களிப்பைச் செய்திருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் நாடாளுமனறத் தேர்தல்களில் வேட்பாளர்களாக நின்றவர்கள் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்கள். ஆனால், இந்தத் தேர்தலானது தேசிய மட்டத்தில் தமிழ் பேசுகின்ற மக்களுடைய ஓர் இலட்சியத்தையும் ஒரு நோக்கையும் வெளிப்படுத்துவதுமாகவே அமைந்திருந்தது.

என்னைப் பொறுத்த வரையில் நான் ஒரு சமூக நிறுவனத்தினுடைய பிரதிநிதி என்ற முறையிலேயே வேடபாளர்களில் ஒருவனாக நியமிக்கப் பட்டிருந்தேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்று இந்தத் தேர்தலிலே போட்டியிட்டதை சர்வதேச சமூகம் அறிந்திருந்தது. அந்த வகையில், எங்களுடைய தேசிய நலனை முன்வைத்து இந்தத் தேர்தலிலே நானும் அந்த இலட்சியத்திற்காகப் போட்டியிட்டேன். அத்தோடு, ஒரு சமூகப் பொறுப்பும் இதன்மூலம் எனக்குத் தரப்பட்டிருப்பதை நான் உணருகின்றேன். பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனப் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய எனக்கு இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த நிறுவனத்தையும் அந்த நிறுவனம் சார்ந்த சமூக மக்களுடைய அபிவிருத்தியையும் கவனிக்கவேண்டிய ஒரு பொறுப்பும் எனக்கு உணர்த்தப்பட்டிருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

**பேட்டி:**
**சி.சுந்தரலிங்கம்,**
**கரவெட்டிச் செய்தியாளர்.**

எமது தேசியத்தினுடைய விடுதலைக்காகவும் எங்கள் தாயகத்தின் விடுதலைக்காகவும் நாம் அயராது உழைக்கவேண்டும். எங்களுடைய சமூக அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு நான் செயற்பட வேண்டிய தேவை எனக்கிருக்கின்றது.

அந்தவகையில், தமிழ்பேசுகின்ற மக்கள் இந்தத் தேர்தலில் தங்களுடைய உணர்வலைகளை வெளிப்படுத்தி எம்மைத் தேர்ந்தெடுத்தமைக்காக எமது மக்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினராகிய நான் என்னுடை நன்றியைத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பதவிக்கு வந்துள்ள அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்தவேண்டுமென்பதையே நாங்கள் வலியுறுத்தி நிற்கின்றோம்.

அமெரிக்காவும் கூட அண்மையில் வெளிப்படுத்தியிருக்கின்றது.

எனவே, அமையப் போகின்ற அரசு ஒரு தொங்கு நிலையிலேயே இருந்தாலும்கூட தமிழீழ விடுதலைப் புலிகளையே தமிழினத்தின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய ஒரு பிரதிநிதியாகிய நானும் வலியுறுத்த விரும்புகின்றேன். (ப-70)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில்
27.03.2004 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் யா/வட்டுக்கோட்டை கல்லூரியின் பழைய மாணவனும் சங்கானை பாரதி வீதியைச் சேர்ந்தவருமான

செல்வன் **சண்முகரத்தினம் கோகுலன்**

அவர்கள் விஞ்ஞானமாணி (B.Sc.) பட்டம் பெற்றமையை நாம் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

திரு. ஹரிமுகன் (சித்தப்பா) குடும்பத்தினர்.
திருமதி தர்மலிங்கம் (அம்மம்மா) குடும்பத்தினர்.

கோண்டாவில் மேற்கு. (30883)(34-12-19-30)

## சேவையிற் சிறக்கும்
# பிரம்மஸ்ரீ சிவராஜசர்மா



இலங்கைவங்கியில் உப முகாமையாளராகப் பணிபுரியும்

பிரம்மஸ்ரீ
### குருசாமி சர்மா சிவராஜசர்மா

அவர்கள் 2004.03.28ஆம் திகதி கொழும்பில் தற்காப்புக்கான ஜப்பானிய உள்ளக பல்கலைக் கழகத்தினால் **"இலக்கிய கலாநிதி"** (டாக்டர்) பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

பல வருடங்களாகப் பல்லாயிரக்கணக்கான சமயப் பேருரைகளை வழங்கி வரும் ஐயா அவர்களின் அரிய சேவையைப் பாராட்டி இப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. வங்கியாளராகப் பணிபுரியும் ஐயா அவர்கள் சமயத் தொண்டிற்கும் தனது நேரத்தை ஒதுக்கி அர்ப்பணிப்புடன் சமயத் தொண்டு புரிவது போற்றுதற்குரியது. சிவபணியிற் சிறந்து நிற்கும் ஐயா அவர்களின் சேவையைப் பாராட்டிப் பல சமய நிறுவனங்கள் ஐயா அவர்களை கௌரவித்து மகிழ்ந்துள்ளன.

சர்வதேச இந்துமத குருபீடம் **"சிவநெறிச் செம்மல்"** என்ற பட்டத்தையும், ஈவினை புன்னாலைக் கட்டுவன் அருள்மிகு மீனாட்சி அம்மன் தேவஸ்தானம் **"சிவநெறிச் செல்வர்"** என்ற பட்டத்தையும் கந்தர்மடம் பழம் பிள்ளையார் தேவஸ்தானத் திருப்பணிச் சபையினர் **"சிவசுரபி"** என்ற பட்டத்தையும் வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் **"பிரசங்க பூபதி"** என்ற பட்டத்தையும் சைவ பரிபாலன சபை **"சைவ சித்தாந்த பண்டிதா"** என்ற பட்டத்தையும் வழங்கி ஐயா அவர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளன.

மூலிகை வைத்தியத் துறையிலும், யோகாசனப் பயிற்சித்துறையிலும் ஐயா அவர்களின் சேவையும் பங்கும் நயத்தற்குரியவை. அத்துறை சார்ந்த பல அரிய நூல்களை ஐயா அவர்கள் ஆக்கி வெளியிட்டுள்ளார்கள்.

தற்காப்புக் கலையிலும் தன்னை ஈடுபடுத்தி அக்கலையிலும் சிறந்து விளங்கும் ஐயா அவர்களுடைய சமய, சமூகப் பணிகள் சிறந்து விளங்கவும் எமது இலங்கை வங்கிக்குப் புகழ்சேர்க்கவும் ஐயா அவர்கள் நீடூழி வாழவும் இதயபூர்வமாகப் பிரார்த்தனை செய்கின்றோம்.

**இலங்கை வங்கி,** **முகாமையாளர்,**
**காங்கேசன்துறை.** (30893)(34-12-19-30) **உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**B.Sc.(Hons) Degree & ACIB**
**DBF, ACBF, CBF (CIB/IBSL)**

Medium - Tamil & English Exam:March & September
Minimum Requirement: G.C.E. O/L 6Passes (5C)&G.C.E. A/L 2Passes
**விண்ணப்ப முடிவு திகதி: 17-04-2004**

**External Degree**
**(Jaffna University & Peradeniya University)**

G.A.Q. | 1st in Com. | B.A. | B. Com.

Minimum Requirement: G.C.E. A/L 3 Passes
**வகுப்புகள் ஆரம்பம்: 17-04-2004**

'இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு: கட்டம் 11'
வகுப்புகள் 17.04.2004, 18.04.2004 தினங்களில் இடம்பெறும்.

Further Details
Director
**Jaffna College Undergraduate Dept.,**
**464, Hospital Road,**
(Near Commercial Bank)
**Jaffna.** (C/34473)(26-12-19-30)


## கண்ணீர் அஞ்சலி

எமது தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி சி.செல்வரஞ்சிதம்
அவர்களின் அன்புத் தந்தையார்

### மார்க்கண்டபிள்ளை சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய உபஅதிபர், வட்டு. இந்துக் கல்லூரி)

அவர்கள் 11.04.2004 அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம். அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இரண்டாம் வருட
வரலாற்றுத்துறை மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(30859)(26-12-19-30)

## கனிஷ்ட தேசிய மெய்வன்மை போட்டி; பதிவு செய்யக் கோரிக்கை

மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள கனிஷ்ட தேசிய மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள், கழகங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள வீரர்களுக்கான தெரிவுகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகின்றன.

12, 14, 16, 18, 20, 23 ஆகிய வயதுகளுக்குட்பட்ட ஆண், பெண் போட்டியாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் யாழ். மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுநரிடம் அல்லது யாழ். பிரதேச செயலக விளையாட்டலுவரிடமிருந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ். மாவட்டத்தில் நடைபெறும மெய்வன்மைப் போட்டிகளுக்குத் தகுதி வாய்ந்த மெய்வன்மை உத்தியோகத்தர்களை நியமிக்கும் நோக்குடன் தொழில்நுட்ப அலுவர்களுக்கான சங்கம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ் மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவர்களுக்கான பரீட்சையில் சித்தியெய்திய அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-6-8)

## இளைஞர், யுவதி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு பிரசார நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டு வந்தது. அதனால் மக்கள் மத்தியில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. அதனால் எமது செயற்பாடுகளை மாற்றி அமைத்து அந்தச் செயற்பாடுகளில் மக்களும் பங்குபற்ற வேண்டும் என்ற நிலைக்குக் கொண்டு வந்தோம். ஆரம்பகாலத்தில் சிறு சிறு குழுக்கள் மூலம்தான் எமது செயற்பாடுகளை மேற்கொண்டோம். அதன்பின், மக்களுடன் நெருங்கிச் செயற்படும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. அதன்மூலம், அவர்களுக்கு இருக்கும் துன்ப, துயரங்களைக் கேட்டு அவர்களுடைய துன்பங்களில் நாமும் பங்குகொண்டோம். இதன்மூலம் பலர் எம்முடன் இணைந்து செயற்பட முன்வந்தார்கள்.

இந்த மக்களுடன் நான் பெற்றுக்கொண்ட அனுபவங்கள்தான் தேர்தலில் ஒரு பெண் பிரதிநிதி நிற்க வேண்டும் என்று வந்தபோது அதனை விரும்பியதற்குக் காரணம், எமது செயற்பாட்டிற்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். அதன்மூலம், எமது பணிகளைப் பரந்தளவில் செய்யலாம் என்பதாகும்.

***கேள்வி:*** தங்களுடைய எதிர்கால நடவடிக்கை என்ன?

***பதில்:*** கிராமத்திலுள்ள அனைத்து பெண்களையும் விழிப்படையச்செய்து தலைநிமிர்ந்து வாழக் கூடியவர்களாக வாழ வைப்பதுதான் எமது முக்கிய பொறுப்பு. அதற்காக எமது சக்தியை முழுமையாகப் பயன்படுத்தி உழைப்போம். ✦


**டிலா வீடியோ போட்டோ**

வீடியோ படப்பிடிப்பு,
புகைப்படப்பிடிப்பு, வெளிப்புறப்
படப்பிடிப்பாளர்களின்
வீடியோ எடிற்றிங்
**பிரதான வீதி,**
**வட்டுக்கோட்டை.**
T.P:0776143794.
(30898)


**தொலைபேசி இயக்குநர் தேவை**

யாழ். நகரை அண்டிய பகுதியிலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றுக்கு பெண்கள் தேவை. சுயவிவரத்துடனும், அடையாள அட்டை நிழற்பிரதியுடனும் 19.04.2004 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல.: 2228**
மே/பா. உதயன் பணிமனை.
யாழ்ப்பாணம்.
(C/34508)


## 2ஆம் ஆண்டு இதய அஞ்சலி

மலர்வு 14 - 05 - 1928



உதிர்வு 09 - 05 - 2002

### அமரர் சின்னப்பு நல்லதம்பி

*சொத்து சுகமெலாம் தேடித் தந்தீர்*
*மெத்தவே வாழ்வில் உயரவும் வைத்தீர்!*
*சித்தமெல்லாம் எமக்காய் உழைத்துச் சென்றீர்*
*அப்பாவே ஈராண்டாய் தேடி நிற்கின்றோம்.*
*உங்கள் ஆத்மசாந்தி வேண்டி நிற்கும்:*

*"செல்வகிரி",*
*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

**- குடும்பத்தினர்.**
(30896)(26-12-19-30)

## பிரிவுத் துயரின் முதலாம் ஆண்டு



← 01-04-1922
தோற்றம்
17-08-1952 →

← 17-03-2003
மறைவு
27-04-2003 →



**திருமதி**
**இரத்தினம் கனகாம்பிகை**

**அமரர்**
**இரத்தினம் மகேந்திரன்**

வாழ்வுக்கு ஒளியேற்றிய குலவிளக்குகளே நீங்கள்!
உங்கள் அம்மா மறைந்த 41ஆம் நாள் - அதன்
வழி நீங்களும் சென்றீர்களோ?
வாழ வழிகாட்டி மறைந்தது ஏனோ?
உங்கள் இருவர் பிரிவும் ஓராண்டு ஆனாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை
விட்டு அகலாது. உங்கள் ஆத்மா
சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ம.பிரதாபன்,*
டிலா வீடியோ,
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
T.P.: 077 6143794. (30899)(26-12-19-30)

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1922-02-10

மறைவு
2003-04-25

திருமதி
### அமுதம்மா அரியரட்ணம்

*சொல்லுக்குள் அடங்காத சோகத்தை தந்துவிட்டு*
*சொந்தங்கள் தவித்து ஏங்க சொர்க்கலோகம் சென்றீரோ?*
*உள்ளத்தில் அன்பு பொங்க உவகையோடு சிரிக்கும் உந்தன்*
*கள்ளமில்லா முகத்தை இந்த காசினியில் எங்கு காண்போம்*
*உள்ளத்தில் வைத்து உமை உரிமையோடு நாம் துதிப்போம்.*
*பள்ளத்தில் வீழ்ந்திடாமல் எமை பாதுகாத்து நின்றிடம்மா!*

*புலோலி தெற்கு,*
*புலோலி.*

திருமதி **அ.அமுதகலா**
(பேர்த்தி)

## மரண அறிவித்தல்

### திருமதி காசிப்பிள்ளை காமாட்சி

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை காமாட்சி நேற்று (15.04.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாத்தாண்டியா காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஸ்ரீ சண்முகராசா (ஸ்ரீராம்ஸ்), ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற ஸ்ரீரங்கராசா மற்றும் ராஜராஜேஸ்வரி, ராஜசுலோசனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மராணி, சாந்தினிதேவி, செல்லையா (குகன் ஸ்ரோர்ஸ்), சண்முகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2004) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு எண்ணாங்கப்பிட்டி காரைநகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*எண்ணாங்கப்பிட்டி,*
*காரைநகர்.* (30903)(34-12-19-30)

தகவல்:
ஸ்ரீசண்முகராசா (மகன்),
"ஸ்ரீராம்ஸ்".

# இருதய நோய் பற்றி ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருத்தல் அவசியம்!

மருத்துவபீடத்தின் வாயிற்படி தாண்டி இடைவழியில் கருகித் தன் பயணமதை நிறைவு செய்துகொண்ட 26ஆம் அணியைச் சேர்ந்த மாணவன் கந்தசாமி சரவணபவானின் 31ஆம் நாள் நினைவாக அதே அணியைச் சேர்ந்த மாணவனால் இக்கட்டுரை வரையப்பட்டது.

எமது சமுதாயத்தில் காணப்படும் தீவிர இதய நோய்களில் பொதுவான சில இதய நோய்கள் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன. எனினும், இவை தவிர்ந்த அரிதான ஆனால், வீரியமான சில இதயநோய்கள் இருப்பினும், வாசகனைத் தவறான இணங்காணலுக்கும் உளப்பாதிப்புக்கும் அவை இட்டுச்செல்லக்கூடும் என்பதனால் அவை பற்றி விளக்கமளிக்கப்படவில்லை.

### இதய நோய்கள்
(Heart diseases)

ஆர்வலரும் பாவலரும் இதயத்திற்குப் பல நூறு வரைவிலக்கணங்கள் கூறிச் சென்றாலும் உடற்கூற்றியலின் அடிப்படையில் இதயம் என்பது எமது உடலின் ஓர் அங்கம் ஆகும்.

**இதயம் என்றால்......**

மனித உடலில் உள்ள கலங்களிற்குத் தேவையான பதார்த்தங்களைக் கடத்துவதற்காக மனித உடலில் உள்ள குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் நடுநாயகமாக விளங்கும் விசேட தசையாலான ஒரு பம்பியாகும்.

மனித சுற்றோட்டத் தொகுதியானது இதயம், நாடிகள், நாளங்கள், குருதி மயிர்த்துளைக்குழாய்கள் ஆகியவற்றால் ஆனது. இதயம் என்ற பம்பியானது குருதி என்ற பாயத்தை தொடர்ச்சியாகப் பம்பிக்கொண்டிருக்க அதனை நாடிகள் என்ற குருதிக் கலன்கள் உடல் அங்கங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கலங்களிற்கு குருதிமயிர்க் குழாய்கள் வழியாக எடுத்துச் செல்ல அங்கிருந்து நாளங்கள் என்ற இன்னொரு வகை குருதிக் கலன்களின் மூலம் இதயத்தை நோக்கிக் கொண்டு செல்லப்படுவதன் மூலம் சுற்றோட்டப் பொறிமுறையானது பூர்த்தியாக்கப்படுகின்றது.

இதயமானது நான்கு அறைகளைக் கொண்டது. (வலது, இடது சோணையறைகள்; வலது, இடது இதயவறைகள்). இதில் ஒட்சிசன் நிரம்பிய குருதியானது நுரையீரலில் இருந்து இடது சோணையறைக்கு கடத்தப்பட அங்கிருந்து உடல் அங்கங்களிற்கு இடது இதயவறை மூலம் கடத்தப்படும். ஒட்சிசன் குறைவான குருதி உடல் அங்கங்களில் இருந்து வலது சோணையறைக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து நுரையீரலுக்கு வலது இதயவறை மூலம் கடத்தப்படும்.

**இதய நோய்கள் என்றால்....,**

இதய நோய்கள் இன்று எம்மிடையே காணப்படும் ஒரு பொதுவான நோயாகும். இது பொதுவாக வயதானவர்களிலேயே ஏற்படினும் இளம் வயதானோரிலும் கணிசமான அளவில் ஏற்படும். தீவிரமான நோய்களும் உண்டு. வைத்திய ஆலோசனையின் கீழ வைத்தியம் பெறுமிடத்து குணப்படுத்தக்கூடிய பொதுவான இந்நோய்கள் நோயாளியின் அறியாமை, வசதியின்மை, அலட்சியம் என்பவற்றால் மரணத்திற்கு இட்டுச்செல்லலாம். எனினும், அரிதான தீவிரமான நோய்களும் உண்டு. இக்கட்டுரையானது பொதுவான இதயநோய்களின் முக்கிய பகுதிகளை வருடிச் செல்கின்றது. பொதுவான இதய நோய்களாக பிறவி இதயக் குறைபாடுகள்(Congenital heart diseases), வாத இதயக் காய்ச்சல் (Rheumatic heart disease), மாரடைப்பு நோய் (Ischaemic heart disease), உயர்குருதி அமுக்கம் (Hypertension) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இந்நோய்கள் தீவிரமடையின் இதயச் செயலிழப்புக்கு இட்டுச்செல்லும். அத்துடன் அதிகளவு மதுபானம் அருந்துதல், குருதிச் சோகை அரிதாக தைரொயிட்டு அதிக சுரப்பு அல்லது சுரப்புக் குறைவு, வேறு தொற்றுநோய்கள், சில மருந்து வகைகள் போன்றவையும் இதயச் செயலிழப்புக்கு இட்டுச் செல்லலாம்.

இதயநோய்களின் போது ஏற்படும் பொதுவான சில நோய் அறிகுறிகளாக நெஞ்சுநோவு, மூச்சுத் திணறல் (இது ஆரம்பத்தில் வேலை செய்யும் போது ஏற்பட்டு பின்னர் தூக்கத்திலும் ஓய்விலும் கூட ஏற்படும்), சளியற்ற வறட்டு இருமல், இரவில் அதிகளவு சிறுநீர் வெளியேறல், இலகுவில் களைப்படைதல், உடற்சோர்வு, கால், முகம், உடல் வீக்கமடைதல், வயிற்று நோ, பசியின்மை, வயிற்றுப்பிரட்டல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### பிறவி இதயக் குறைபாடுகள்
(Congenital heart diseases)

இவை,

1) மரபணுக் குறைபாடுகள்

2) கட்டுப்பாடற்ற சலரோகம்

3) கர்ப்ப காலத்தில் பாவிக்கும் சில மருந்து வகைகள் (இதனைத் தவிர்க்க கர்ப்ப காலத்தில் விசேட வைத்தியரின் ஆலோசனையின் கீழ் மருந்து வகைகளைப் பாவிப்பது சிறந்தது).

4) கர்ப்ப காலத்தில் ஏற்படும் சில தொற்றுநோய்கள்: தாய்க்கு ஏற்படும் ஜேர்மன் சின்னமுத்து, வைரஸ் கிருமித் தாக்கத்தால் பிள்ளைக்கு இருதயநோய் ஏற்படலாம். ரூபெல்லா தடுப்பூசி (Rubella Vaccine) தக்க காலத்தில் பெண்பிள்ளைகளுக்கு ஏற்றுவதால் இந்நோயால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்க்கலாம்.

5) கர்ப்பகாலத்தில் X-கதிர், C.T. - சோதனைக்கு உட்படல்.

6) தாய் மதுபானம் அருந்துதல் ஆகியவற்றால் ஏற்படலாம்.




இந்நோயுடைய குழந்தைகள் அழும்போது சொண்டுப் பகுதி, நாக்கு என்பன நீலம்பாரித்தல், வாந்தியெடுத்தல், பால்குடிக்கும் போது களைப்படைதல், மூச்சுத் திணறல், அடிக்கடி சினத்தல், வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இன்மை, அடிக்கடி மயக்கம் அடைதல், தலை அசாதாரணமாக வியர்த்தல், அடிக்கடி ஏற்படும் சுவாசத் தொற்று நோய்கள், மூச்சுவிட முடியாமை, காய்ச்சல், சளி, இளைப்பு, உணவூட்ட முடியாமை போன்ற அறிகுறிகளை வெளிக்காட்டுவர்.

மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் குழந்தையின் பெற்றோர் வைத்தியரின் ஆலோசனையை நாடுதல் அவசியம். குழந்தை பிறந்தவுடன் குலறபாடானது இனங்காணப்படின் தவறாது கிளினிக் சென்று உரிய மருந்துகளை ஒழுங்காகக் கொடுத்தல், மேற்படிக சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்படின் அதனைச் சரியாகப் பின்பற்றுதல் (ஒழுங்கான ECHO சோதனைகளைச் செய்தல், சத்திர சிகிச்சைக்குரிய திகதி தரப்பட்டால் தவறாது நடைமுறைகளைப் பின்பற்றுதல்), குழந்தைக்கு ஏற்ற உணவூட்டல் முறையைப் பின்பற்றுதல் போன்றவற்றை நிறைவேற்றுதல் வேண்டும்.

பெற்றோர் சத்திரசிகிச்சைக்கான நிதிப் பற்றாக்குறை உடையவராய் இருப்பின் ஜனாதிபதி நம்பிக்கை நிதியம், அரும்புகள் சிறுவர் நிதியம், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியை நாடமுடியம்.

### மாரடைப்பு நோய்
(Ischaemic heart disease)

இதயத் தசைகளுக்கு இரத்த ஓட்டம் குறைவதால் ஏற்படும் மாரடைப்பின்போது நடுநெஞ்சுப் பகுதியில் வலி ஏற்படல். இவ்வலியானது கை, கழுத்து, தாடை, தோள்மூட்டு (இடது), முதுகுப் பகுதிகளுக்கு பரவுதல், வேலைசெய்யும்போது தாடை, கழுத்து, கைப் பகுதிகளில் வலி அதிகரித்தல், அமிலம் குறைக்கும் மாத்திரைகளுக்கும் குணமடையாத மேல் வயிற்று நோ, நெஞ்செரிவு போன்ற அறிகுறிகள் வெளிக்காட்டப்படலாம்.

இந்த இதயநோயானது பெண்களில் மாதவிடாய் நிறுத்தத்தைத் தொடர்ந்தும் ஆண்களில் 40 வயதின் மேலும் அதிகளவில் உண்டாகும். மரபணு ரீதியில் ஏற்படும் மாற்றம், ஓமோன்களின் தொழிற்பாட்டில் ஏற்படும் மாற்றம், பருமனான உடல், உயர் குருதிக் கொழுப்பு, உடற்பயிற்சியின்மை, நீரிழிவு, அதிகளவு மது அருந்துதல், புகைத்தல் போன்ற காரணிகளால் ஏற்படும். மாரடைப்பு ஏற்பட்ட ஒருவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதன் மூலம் பாரிய இதயப் பாதிப்புக்களைத் தவிர்க்க முயற்சிக்கப்படும். மாரடைப்பின் பின்னர் நோயாளியின் ஒவ்வொரு செயற்பாடும், உணவும் வைத்திய ஆலோசனைக்கு அமையவே இடம்பெறுதல் வேண்டும்.

மாரடைப்பு உடையவர்கள் தொடர்ச்சியாக மருந்துகளைப் பாவிப்பதனால் இதயப் பாதிப்புக்களைத் தவிர்க்கலாம். மருந்து மூலம் குணப்படுத்த முடியாதவர்கள் மாற்று சத்திரசிகிச்சை முறையால் எஞ்சிய வாழ்க்கைக் காலத்தை ஆரோக்கியமாக மாற்ற முயற்சிக்கலாம்.

### வாத இதயக் காய்ச்சல்
(Rheumatic heart disease)

இது சிறுபிள்ளைகளைத் தாக்கும் பின்விளைவுகளைக் கொண்ட காய்ச்சல். தொண்டையழற்சி ஏற்பட்டு (Group-A Strepto Coccus இனால்) உரிய முறையில் சிகிச்சை எடுக்காவிடில் இது ஏற்பட இடமுண்டு.

பொதுவாகச் சிறுபிள்ளைகளைத் தாக்கும் இந்நோய் சனநெருக்கடியான வீடுகளில் உள்ளோர், ஏழ்மையல் உள்ளோர், சுவாசத்தொற்று உள்ளோருடன் தொடர்புடையோர், தொண்டை அழற்சி ஏற்பட்டு சிகிச்சை பெறாதோரில் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம்.

தொண்டையழற்சி சிறுபிள்ளைகளில் ஏற்பட்டவுடன் தவறாது வைத்திய சிகிச்சையை மேற்கொள்ளுதல், ஆரோக்கியமான, காற்றோட்டமான வாழ்விடங்களை அமைத்தல் போன்றவற்றின் மூலம் நோயின் தாக்கத்தைத் தவிர்க்க முடியும்.

நோயின் ஆரம்பம் மூட்டுக்களில் தொடங்கி இறுதியில் இதயத்தையே பாதிக்கும். எனவே, இந்நோயின் அறிகுறிகள் நோயின் வீரியத்திற்கு ஏற்ப மாறுபடலாம்.

**ACute Rheumatic Fever**

◆ தொண்டையழற்சி ஏற்பட்டு இரண்டு கிழமைகளில் காய்ச்சல் ஏற்படலாம் (எல்லோருக்கும் அல்ல).

◆ மூட்டுக்களில் நோ (சில வேளைகளில் முழங்கால், கணுக்கால் பகுதிகளில் அல்லது பல மூட்டுக்களைப் பாதித்தல்).

◆ இதய அழற்சியினால் படபடப்பும் நெஞ்சுநோவும்.

◆ இதய வால்வுகளில் மாற்றம் காரணமாக அடிக்கடி களைப்படைதல்.

**Chronic Rheumatic Heart Disease/Chronic Carditis**

ஆரம்ப நோய் நிலையினைக் கவனத்தில் கொள்ளாதுவிடின் நெஞ்சு நோ, உடல் நிறை குறைவடைந்து செல்லல், இலகுவில் களைப்படைதல், விளையாட்டுக்களில் ஈடுபட முடியாமை போன்றன ஏற்படும்.

நோய் ஏற்படும் பட்சத்தில் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்திக்கொண்டு தவறாது கிளினிக் செல்லல்வேண்டும். அங்கு தரப்படும் மருந்துகளை ஒழுங்காக எடுக்கவும். Benzathine Penicillin ஊசி போடப்படின் சரியான கால இடைவெளியில் எடுக்கவேண்டும். அத்துடன், வைத்திய ஆலோசனைப்படியே B.Penicillin ஊசி எடுத்தல் நிறுத்தப்படல் வேண்டும். Penicillin இற்கு ஒவ்வாமை உள்ளவர்கள் மாற்று சிகிச்சைகளைப்பெற முடியும் தவிர்க்க முடியாத காரணத்தால் கிளினிக் செல்லாதவிடத்து Penicillin வில்லைகளை வைத்தியரது ஆலோசனைப்படி பெறவும்.

மணம் முடிக்கவுள்ள யுவதிகள் இந்நோயை மறைப்பது தவறானது. ஏனெனில், கர்ப்பகாலத்தின்போதும் பிரசவத்தின்போதும் தாய், சேய் இருவருக்கும் இருதய நோயால் பாதிப்பு ஏற்படலாம்.

★ இருதய வால்வுகளில் ஏற்படும் பாதிப்புகளைத் திருத்தி அமைக்க வசதிகள் உண்டு. ஆகவே, இந்நோய் உள்ளவர்கள் விசேட வைத்தியரின் ஆலோசனையை நாட வேண்டும்.

### இதய உள்ளுறை அழற்சி
(Infective Endocarditis)

இது இதய வால்வுகளிலும் இதய அகவணியிலும் ஏற்படும் கிருமித் தாக்கம் ஆகும். வாத இதயக் காய்ச்சல் நோயுள்ளோர், பிறப்பிலேயே இதய நோயுள்ளோர் வால்வுகளில் (இருகூர்) சுருக்கம் உள்ளோர், செயற்கை வால்வு பொருத்தியவர்கள் இந்நோயால் இலகுவில் பீடிக்கப்படுவர். பொதுவாக எமது உடலில் காணப்படும் தீங்கு விளைவிக்காத நுண்ணங்கிகள் குருதிச் சுற்றோட்டத்தினூடு இதயத்தைச் சென்றடையும் போதும், குருதி நாளங்களினூடு போதை மருந்துப் பாவனையின் போதும் இந்நோய் ஏற்படலாம்.

இந்நோயின் அறிகுறிகளாகத் தொடர்ச்சியான காய்ச்சல், உடற்சோர்வு, நிறைகுறைதல், பசியின்மை, தோலில் இரத்தக்கசிவு அடையாளம், சிறுநீரில் இரத்தக்கசிவு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். உரிய தடுப்பு மருந்துகளை வழங்குதல் மூலம் இதனைக் குணப்படுத்த முடியும்.

பல் பிடுங்கும் போதும், சத்திர சிகிச்சையிலும் உங்களிற்கு இருதய நோயிருப்பின் அதனை வைத்தியருக்கு தெளிவாக அடையாளப்படுத்தல் இந்நோய்க்கான சிறந்த முற்காப்பாக அமையும்.

### உயர் குருதியமுக்கம்
(Hypertension)

சாதாரண மனிதனின் குருதியமுக்கமானது 120/80mm Hg ஆகும். இக்குருதியமுக்கமானது 140/90mm Hg என்ற அளவையும்விட கூடவாக இருப்பின் அந்நிலை உயர்குருதியமுக்கம் எனப்படும். உயர் குருதியமுக்கமானது பல்வேறு காரணிகளால் தோற்றுவிக்கப்படலாம். அவற்றுள் பரம்பரை ரீதியான காரணிகள், மன உளைச்சல், அதிக உடற்பருமன், அதிக உப்புள்ள உணவு, கொழுப்புணவு, மதுபானம் அருந்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உயர் குருதியமுக்கமானது சிறுநீரக நோயுள்ளவர்கள், அகஞ்சுரக்கும் சுரப்பி நோயுள்ளவர்கள், 60 வயதிற்கு மேற்பட்டவர்கள், சலரோக நோயுள்ளோர்கள் போன்றோருக்கு அதிகளவில் ஏற்பட இடமுண்டு.

98% நோயாளிகளில் இந்நோய்க்கான அறிகுறிகள் வெளிக்காட்டப்படுவதில்லை. எனினும், அதிகளவு வியர்வை வெளியேறல், தலையிடி, தலைச்சுற்று, நெஞ்சு படபடப்பு, மூக்கிலிருந்து இரத்தம் வருதல், வழமைக்கு மாறாக அதிகளவு சிறுநீர் கழித்தல், மூச்சுத்திணறல் போன்றவற்றை இதன் அறிகுறிகளாகக் கொள்ளலாம்.

உயர் குருதியமுக்கத்தினால் பல்வேறுபட்ட அங்கங்கள் பாதிப்படைய இடமுண்டு. குறிப்பாக இதயச் சுவர்கள் தடிப்படைதல், இதயவறைகள் பெரிதாவதினாலும், இதயத்திற்கான குருதி வழங்கல் பாதிக்கப்படுவதாலும் இதயச் செயலிழப்பு ஏற்படும்.

இதைவிட, உயர் குருதியமுக்கம் காரணமாக நலிவான குருதிக்கலன்களில் வீக்கம் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாக குருதிக் கலன்களில் வெடிப்பு ஏற்படும். இதனால், குருதியிழப்பு ஏற்படும் (குறிப்பாக மூளையில் ஏற்படும்) இதனால் பாரிசவாதம் போன்ற பாரதூரமான விளைவுகளும் உண்டாகலாம்.

உயர் குருதி அமுக்கமானது குருதிக் கலன்களிற்குள் குருதி உறைவிற்கு அல்லது குருதிக் கசிவுக்குக் காரணமாக அமைவதால் பாரிசவாதம் போன்ற பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அத்துடன், கண், சிறுநீரகம் போன்ற அங்கங்களும் பாரிய தாக்கங்களுக்கு உட்படலாம்.

உயர் குருதியமுக்கம் ஏற்பட்ட ஒருவர் அதனைக் கட்டுப்படுத்த ஒழுங்கான குருதியமுக்கப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், மரக்கறி, பழவகைகளை உண்ணுதல், உப்புக்கூடிய கொழுப்புணவுகளைக் குறைத்தல், உடற்பயிற்சி செய்தல், உடல்நிறையைக் குறைத்தல், புகைப்பிடித்தல், மதுபாவனையை முற்றாக நிறுத்துதல், சினத்தைக் குறைத்தல், மன அழுத்தத்தைக் குறைத்தல், வைத்திய ஆலோசனையை நாடல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றவும்.

இறுதியாக எங்கள் சரவணபவானின் கதையைப் பகிர்ந்து கொள்வோம். கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று அவனை ஆட்கொண்ட நோய் ஓர் அரிதான ஆனால் வீரியமான Cardio myopathy எனப்படும் இதயத் தசைகளைப் பாதிக்கும் ஒரு நோயாகும். இது நிறமூர்த்தப் பிறழ்வுகள், கிருமித் தொற்றால் ஏற்படும் அழற்சி, அனுசேப - போசணை ஓமோன் சமநிலைக் குறைபாடுகள், நரம்புத் தசைக்குறைபாடுகள், குருதிக்குறைபாடுகள், புகைப்பிடித்தல் போன்றவற்றால் ஏற்படலாம். இது பொதுவாக இளம் வயதினரிலேயே ஏற்படுகின்றது. இதனால் இளம் வயதுடைய ஒருவருக்கு முன்னர் கூறப்பட்ட இதய நோய்க்கான அறிகுறிகள் காணப்படின் இதயத் தசைக்குரிய இதய நோய்க்கான பரிசோதனைகள் செய்வது அவசியமானது. வைத்திய பரிசோதனைகள் மூலம் கண்டறிந்தால் அதற்கான சிகிச்சையைப் பின்பற்றுவது மிகவும் அவசியமானது. இருப்பினும், நோயின் அறிகுறிகளைக் குறைத்தலும் நோயால் ஏற்படும் சிக்கல்களைக் குறைத்தலும் சிகிச்சையின் பங்காக இருக்கும். இதயமாற்று சத்திரசிகிச்சையின் மூலம் நோயாளியின் ஆயுளை மேலும் சில காலம் நீடிக்கலாம்.

என்றோ ஒரு நாள் கருகிடப் போகும் இவ்இளந்தளிர் மருத்துவனாகி சேவை செய்யும் காலத்தில் கருகிடுமாயின் அவ்விழப்பு தாங்க முடியாத பெரும் இழப்பாக அமைந்திருக்கும் என்ற ஆறுதலே அவன் பிரிவால் துயருறும் ஒவ்வோர் இதயங்களிற்கும் உரமாக அமையட்டும்.★

## இந்து தர்மத்தில் கூறப்படும் நன்நெறிகளும் ஒழுக்கநெறிகளும்

"உன்னுடைய பக்கத்து வீட்டுக்காரனை, உன்னைப் போல நேசி" என்பது மிக உயர்ந்த விதியாகக் கருதப்படுகின்றது. ஆனால், படைப்பு அனைத்தையும் ஒரே சொரூபமாகக் காணும் இந்துவிற்கு இது மிகச் சிறந்த கோட்பாடு அன்று. "தத்துவ ரீதியாக நானும் எனது பக்கத்து வீட்டுக்காரரும் ஒரே சொரூபம். நானே அவன். எனவே, நான் அவனை நேசிக்கிறேன்" என்பது இந்துவின் கோட்பாடாகும்.

கூறப்போனால், வாழ்க்கையில் ஒன்றாகிய தன்மையை தன்னுடைய அனுபவத்தில் உணர்வதே இலட்சியம். எனவே, ஒழுக்கமும் நன்நெறியும் இல்லாத ஆன்மீக வாழ்வு கற்பனை செய்யமுடியாத ஒன்றாகும். எனவே, இந்து ஒருவன் ஒழுக்கத்திற்கு மிகவும் முக்கியமான இடத்தைத் தருகிறான்.

**ஞானக்கதிர்**

ஒழுக்கமும் நன்நெறியும் மிகவும் முகக்கியமானவை. இந்து தர்மம் அவற்றின் சாரம் அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம் (பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை), பிரமச்சரியம், அபரிக்கிரகம் ஆகியவை யமம் ஆகின்றன. சௌசம், சந்தோஷம், தபஸ், ஸ்வாத்யாயம், ஈஸ்வரார்ப்பணம் ஆகியவை நியமம் எனப்படும்.

எவ்வுயிரையும் எவரையும் எணணம், சொல், செயல் ஆகியவை எந்த வகையிலும் துன்புறுத்தாமை, அஹிம்சை ஆகின்றது. ஆனால், இந்தச் சீரிய குணத்தைக் கடைப்பிடிப்பவன் கோழையாக - வலிவற்றவனாக - இருக்கக்கூடாது. வலுவும், நெஞ்சுறுதியும் உள்ள தீரர்களே அஹிம்சையைக் கையாளமுடியும்.

எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒன்றுபட்டும், இணைந்தும் இருப்பதே சத்தியம். இது நன்மையாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும்.

அஸ்தேயம் என்பது பிறர் பொருளைத் திருடாமை எனப்படும். அளவுக்கு மீறிய செல்வம் உடையவராக இல்லாமை எனவும் மற்றொரு பொருள் உண்டு.

மனம், மொழி, மெய்களால் முற்றிலும் நல்லொழுக்கத்துடன் கற்பைக் கடைப்பிடிப்பது பிரமச்சரியம்.

தன்னுடைய தேவைக்கு மேற்பட்ட எந்தப் பொருளையும் பிறரிடமிருந்து பெறாதிருப்பது அபரிக்கிரஹம்.

சௌசம் என்பது, செம்மையும் தூய்மையும் ஆகும்.

மனத்திருப்தி, பொறாமையில்லாத புத்துணர்ச்சியுடன் வாழ்தல் சந்தோஷம் ஆகும்.

ஈஸ்வர வழிபாடாகச் சேவை செய்தல், மனம், பேச்சு ஆகியவற்றை அடங்குதல் தவம் எனப்படும்.

சாஸ்திரங்களை ஆராய்தல், நாம ஜெபம், பிரார்த்தனை முதலியவை ஸ்வாத்யாயம் ஆகும்.

தன்னுடைய செயல்களின் பலன்களையும் இறுதியில் தன்னையும் ஈஸ்வரனிடம் அர்ப்பணிக்கும் செயல் ஈஸ்வரார்ப்பணம் ஆகும்.

இவை இந்து தர்மத்தின் அடிப்படையான பத்துக் கொள்கைகள் ஆகும்.

நன்றி:
'இந்துவே உன்னை அறிந்துகொள்'.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கடந்த 7ஆம் திகதியன்று நுணாவில் சந்தியிலிருந்து சங்கத்தானைக்கு பிரயாணஞ்செய்தபோது கைச்சங்கிலி ஒன்று மினிபஸ்ஸினுள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நுணாவில் சந்தி, ராசாகடை, கமலா தொலைத் தொடர்பு நிலையத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/34502)

புங்குடுதீவைச் சேர்ந்த தங்கராஜா சர்மிலா என்பவருடைய தே.அ.அ. (இல.796763914V), விசேட அ.அ. (மன்னார்) என்பன யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். இல.560, K.K.S. வீதி (மில்க்வைற்றுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (30907)

NOKIA - 2100 - நீலநிற கைத் தொலைபேசி, மட்டுவில் அம்மன் கோவிலடியில் 12.04.2004ஆம் திகதி தவறிவிட்டது. இது பற்றிய தகவல் அறிந்தவர்கள்/கண்டெடுத்தவர்கள் தயவுசெயது கீழ்வரும் தொலைபேசி நிலையத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 021-4590508. (30908)

## விற்பனைக்கு

SISIL-DELUXE குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (கஸ்தூரியார் வீதிச் சந்தி அருகில்). (30890)

11ஸ்ரீ தொடரிலக்க TOYATA CORILA கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.அன்னலிங்கம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 021 222 5019.(30870)

திருநெல்வேலியில் நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள (1½) ஒன்றரைப் பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு, (1½) ஒன்றரைப் பரப்பு வெற்றுக்காணி என்பன கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 422 692. (30889)

### கார் விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட நல்ல நிலையிலுள்ள பரீனா கேம்பிறிச் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
906. கே.கே.எஸ்.வீதி.
நாச்சிமார் கோயிலடி. யாழ்ப்பாணம். (30914)

## பாலர் பகல் விடுதிக்கு வானொலிப் பெட்டி

கோப்பாய் சமூக சங்கம் நடத்தும் பாலா பகல் விடுதி மழலைகளின கற்றல் பயன்பாட்டிற்கென கோப்பாய் வடக்கைச் சேர்ந்த கா.பண்டிதர் என்பவர் வானொலிப்பெட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (எ-72)

## விளையாட்டு நிகழ்வு

தமிழீழ விளையாட்டுத்துறை மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் டயானா விளையாட்டுக் கழகம் நடததும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை பிற்பகல் 3.30 மணி முதல இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :-

☆ பிற்பகல் 3.30 மணி - அராலி ஏ.எல்.வி.க. எதிர் மணல்காடு சென் அன்ரனீஸ் வி.க.

☆ மாலை 4.30 மணி - மயிலங்காடு ஞானமுருகன் வி.க. எதிர் நாவாந்துறை சென். அன்ரனி வி.க.(எ-72)

## தேவை

யாழ்.நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை.

விண்ணப்பதாரர் க.பொ.த.சாதாரணதரம் (ஆங்கிலம் உட்பட) சித்தியுடன் அனுபவமும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவும் இருத்தல் விரும்பததக்கது. இருபாலாரும் சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.2229,
மே/பா உதயன். (30913)

## சாரதி தேவை

மென்பான நிறுவனமொன்றுக்கு நாளாந்த தேவைக்கு சாரதி தேவை. சம்பளம் நேரில் பேசித தீர்மானிக்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: A.அழகு,
NO.:237, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(பிலிப் நேர்சிங் ஹோம் முன்பாக)
T.P.: 0777 589608. (30912)

## தேவை

யாழ்.நகரில் பிரபல வீடியோ புகைப்பட நிறுவனம் ஒன்றிற்கு பின்வருவோர் தேவை.

- ★ படப்பிடிப்பாளர் (ஆண்)
- ★ கணனி Photo Shop 7.0 தெரிந்தவர்கள் (ஆண், பெண்)
- ★ காசாளர் (பெண்)

தகுதியுடையோர் 30.04.2004இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 2227,
மே/பா உதயன். (C/34504)(21-14-16)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்.....!
14.04.2004 முதல் 20.04.2004 வரை

இளைஞர்களே!

★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம் ★ நடுக்கம் ★ நித்திரை குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம்.

*குறிப்பு:* இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.


தொடர்புகளுக்கு:

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-30109) (24-19-15)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 01 - 06 - 1973



கண்கலங்க 28 - 0? - 2003

### அமரர் இராஜரட்ணம் வரதராஜன்

திதி: 16.04.2004 துவாதசி

கண்விழித்து எழுந்த போது
நீ கலைந்துபோன செய்தி வந்து
எம்காதில் விழுந்ததையா
கதறி அழுதும் விழுந்தும் புரண்டும்
கண்ணீரும் தீரவில்லை கவலையும் மாறவில்லை
ஆனால் காலமோ ஓராண்டாகிவிட்டது.
உனது நினைவுகளோ என்றும்
கனக்கும சுமையாய் எம்மனதில்

இன்று (16.04.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

(30915) (26-12-18) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சின்னத்துரை



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும் தற்போது இளவாலையில் வசித்த வருமான நாகம்மா சின்னத்துரை 14.04.2004 அன்று காலமாகிவிட்டார்

அன்னார் சின்னத்துரையின் அன்பு மனைவியும் இராசாத்தி, இராஜேஸ்வரி, தர்மலிங்கம், புவனேஸ்வரி, சண்முகலிங்கம் (ஜேர்மனி), நகுலேஸ்வரி சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகரத்தினம், அப்புத்துரை, தவமணிதேவி, நகுலேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற தங்கராசா, ரவிச்சந்திரன், ராஜ்மோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2004) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முள்ளானை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

பொல்வத்தை,
இளவாலை வடக்கு, இளவாலை. (30902) (26)

## PC HOUSE

# விசேட சலுகை

**Pentium IV**
Intel Pentium IV 1.8 Ghz Processor
Gigabyte Motherboard
128 MB DDR Ram
40 GB Hard Disk Drive
ATX Casing P-IV
1.44 Floppy Drive
Ps2 Keyboard
Ps2 Mouse & Pad
52X CD Rom
Multimedia Speakers
15" Philips Color Monitor
53,500/-

**AMD** AMD Athlon XP 2100 Processor
Gigabyte Motherboard
128 MB DDR Ram, 40 GB Hard Disk Drive
ATX Casing P-IV, 1.44 Floppy Drive
Ps2 Keyboard
Ps2 Mouse & Pad
52X CD Rom, Multimedia Speakers
15" Philips Color Monitor
47,500/-

**Pentium IV**
Intel Pentium IV 2.4 Ghz Processor
Gihabyte Motherboard
256 MB DDR Kingston, 80 GB Hard Disk Drive
ATX P-IV Casing, 1.44 MB Floppy Drive
USB Keyboard , USB Scroll Mouse + Pad
DVD Rom 16x, Multimedia Speakers
15" Philips Color Monitor
67,000/-

**Intel Celeron**
Intel Celeron 2.0 Ghz Processor
Gigabyte Motherboard
256 MB Ram
60 GB Hard Disk Drive
64 MB VGA
ATX Casing P-IV
1.44 MB Floppy Drive
Ps2 Keyboard
Ps2 Mouse & Pad
52X CD Rom
Multimedia Speakers
15" Philips Color Monitor
55,500/-

தெரிவுக்கு முந்துங்கள் இலவசம்....

தெரிவு 1: 0600VA Prower Tree UPS
தெரிவு 2 : Dust Cover + Screen Filter and 2 Way Creative Sub Woofer
தெரிவு 3 : 17" Monitor Philips

1K, Stanley Road, Jaffna

இச்சலுகை ஏப்ரல் 14 -30வரை மட்டுமே



# இயேசு அழைக்கிறார்

"ஜீவவசனமும் நாதமும்"

பத்மஸ்ரீ சின்ன மௌலானா நாதஸ்வர வித்துவானின் பேரன் **ஷேக் பவுள் சின்ன ஹாசிம்** *அவர்களின் விசேட இசைக்கச்சேரி*

இடம்: அசெம்பிளி ஒப்கோட் தேவசபை சுதுமலை சந்தி, மானிப்பாய்
காலம்: 16.04.2004 முதல் 18.04.2004 வரை மாலை 4.00 மணிக்கு

இடம்: அசெம்பிளி ஒப்கோட் தேவசபை மாதகல்
காலம்: 19.04.2004 மாலை 4.00 மணிக்கு

பிரவேசம் இலவசம்.

இடம்: அசெம்பிளி ஒப்கோட் தேவசபை 14,ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
காலம்: 21.04.2004 முதல் 25.04.2004 வரை மாலை 4.00 மணிக்கு.

(30905)(37)

*நண்பனைப்போல ஆலோசனை தருபவர், தகப்பனைப்போல சுமந்து செல்பவர், தாயைப்போல அரவணைப்பவர்,* இயேசு உங்களை அழைக்கிறார்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## Dr.சி.சிவபாலன் J.P.

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

சுன்னாகத்தில் வசிப்பவரும் புத்தூரில் சோதிவைத்தியசாலையின் வைத்தியரும், சமூகசேவையாளரும், சுன்னாகம் கிராம மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவருமான புகழ்பூத்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.வி.சிவசுப்பிரமணியத்தின் மகனுமாகிய இவர் 15.04.2004 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் R.T.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவரை நாங்கள் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(30926)(16-12-40) -நண்பர்கள்.

புதிய ஆண்டில் புதுயுகத்தை நோக்கி....
யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக
Hardware Technology தமிழில்... Desk Top Publishing & Video Mixing
பதிவுகளுக்கு:
College of Computer
கணனியியல் கல்லூரி
230 நாவலர் வீதி, யாழ்
(இலுப்பையடிச்சந்தி அருகில்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1 12.00 AM
பிரிவு 2 17.04.2004 6.00 PM



உ
சிவமயம்

# இந்து விளையாட்டுக் கழகம்

இணுவில்

## 46ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு வைபவமும்

காலம்: நாளை(17.04.2004) சனிக்கிழமை பி.ப. 3.30 மணி
இடம் : கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் (இணுவில் கிழக்கு)
தலைவர் : திரு. செ.இலகுநாதன் *(தலைவர், இந்து விளையாட்டுக் கழகம்)*
பிரதம விருந்தினர் : திரு.றொகான் ராஜசிங்கம் *(விளையாட்டு அதிகாரி, யாழ். மாவட்டம்)*
சிறப்பு விருந்தினர் : திரு. மாதுளன் *(விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)*
திரு.பாஸ்கரன் *(விளையாட்டு அலுவலர், உடுவில் பிரதேச செயலகம்)*
திரு. றமணன் *(விளையாட்டு அலுவலர், யாழ். பிரதேச செயலகம்)*

ஆண்டு விழாவை முன்னிட்டு 17.04.2004 (சனிக்கிழமை) காலை 6.00 மணியளவில் மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற இருப்பதால் இதில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பெயர்களை இலச்சுமி உணவகத்தில் (அன்ரப்பா கடை), (கே.கே.எஸ். வீதி, இணுவில்) பதிவு செய்துகொள்ளவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறார்கள்!

*இணுவில்.* (30922) (22-16-13-40) இந்து விளையாட்டுக் கழகம்

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்
**பொ.குமாரதேவி (99A)**
அவர்களின் அன்புத் தந்தையார்
## பெரியதம்பி பொன்னுத்துரை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்கள் (99A பிரிவு)
யாழ்.போதனா வைத்தியசாலை.

(C/34485)(40-16-13)

தென்னிந்திய திருத்தல யாத்திரை

தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்

★புட்டபத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தரிசனம். திருப்பதி, சென்னை, மகாவலிபுரம், மெரினாபீச், காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள், சிதம்பரம் நடராஜர், தில்லை காளி அம்மன், திருவாரூர், மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி பூம்புகார், குற்றாலம் நாமக்கல் ஆஞ்சநேயர், தஞ்சாவூர், தஞ்சைப் பெருங்கோயில், திருச்சி உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், பழனி, மதுரை மீனாட்சி ஆலயம், மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வள்ளி குகை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமி மலை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவேனி சங்கமம், குமரி அம்மன் ஆலயம், காந்தி மண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம், திருவள்ளுவர் சிலை கடலில் யந்திரபடகுமூலம் சென்று பார்த்தல், திரு அரங்கநாத சுவாமி, திருவரங்கம், திருவளைக்காவல் சிவன் கோவில், சமயபுரமாரியம்மன்.
★யாத்திரிகளுக்கு சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும், முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசுவாகனங்களில் வழிகாட்டித்துணையுடனான பிரயாணமும் உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.
★இத்திருத்தல யாத்திரை மே 5 ஆம் திகதி ஆரம்பமாகும். யாத்திரிகர்களின் எண்ணிக்கை வரையறைக்குட்பட்டிருப்பதால் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
★நியாயமான கட்டணம்.

Metro Travel & Tours (Pvt) Ltd,
No.4031/2,Galle Road,Wellawatta,Col-06.
Tel:2362766,4510562,2361888 fax:2361888
(இலங்கை உல்லாசப் பிரயாண சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)
(சி34509)(37-16-13-40)

# கட்டடத்தொழில் பயிற்சிநெறி

தென்மராட்சி,ஏப்.16

யாழ் மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மேசன் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் திருகோணமலையில் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் தென்மராட்சிப் பிரதேச இளைஞர்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் உள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வோருக்கு பயிற்சிக் காலத்தில் தங்குமிட வசதியும் உணவும் வழங்கப் படுமெனவும், பயிற்சி முடிவில் சான்றிதழும், கொடுப்பனவும் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-117)

## கவிதை நூல் வெளியீடு

திரு.த.ஜெயசீலன் அவர்களின்
கைகளுக்குள் சிக்காத காற்று
இடம்: நாவலர் கலாசார மண்டபம்
காலம்:17.04.2004 சனி
மாலை 4.00 மணி.
அனைவரும் வருக!
(30812)(X12)

கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு
யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந் நடித்த
உன்னைப் பார்த்த நாள் முதல் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30. (மு.தே.)
கில்லி காட்சி நேரம்: 6.30,9.30 (பி.தே.)



நிறஞ்சனாஸ் சங்கானை
தனுஸ், சோனியா, நாகேஸ் நடித்த
காதல் கொண்டேன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இரவு 8.45 இற்கு
Maid in Manhattan (ஆங்கிலப்படம்)
(C/34420)



நாகம்ஸ் சுன்னாகம்
3 ஆவது வெற்றிவாரமாக...
விஜய், சிம்ரன், விவேக், நடித்த
உதயா
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(44180)



# ஓய்வூதியம் பெறுவதில்லையென ஹெல உறுமய எம்.பிக்கள் முடிவு

கொழும்பு,ஏப்.16

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்கு வழங்கப்படக் கூடிய ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கக் கூடாது. எதுவானாலும் நாங்கள் அதைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்று கூறியுள்ளார் அக் கட்சியைச் சேர்ந்த அதுரலிய ரட்ன சாரதேரர்.

அரசாங்க பங்களாக்கள், வரியற்ற கார்கள் போன்ற இலவச வசதிகள் பற்றி தாங்கள் இன்னமும் முடிவு செய்யவில்லை என்று கூறிய அவர் தாங்கள் எதுசெய்தாலும் வீண விரயத்துக்கோ ஊழலுக்கோ இடந்தரப்போவதில்லையென்று கூறினார்.

(ப)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு 02 - 08 - 1939 | உதிர்வு 17 - 03 - 2004



சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும்
ஆலங்குழாய், சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் தம்பையா காராளசிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், வலி.தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்)

தாராள மனம் கொள்
காராள சிங்கம் என் பெரியோன்
ஊராள மனம் சோர்ந்து
பேராளன் தாள் சேர்ந்தான்!
வாராயோ என மனையாள் புலம்ப
மீளாயோ என மகள்தான் கலங்க
மறந்தாயோ என உறவுகள் தவிக்க
சீரான சீமான் நீர் போய் திங்கள் ஒன்றானதோ!
வானேகும் மன்னவ நின் ஆன்மா
மேலான சாந்தி அடைக!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சுதுமலை மேற்கு,*
*மானிப்பாய்.* (30927)(38-1613-40) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னப்பு இரத்தினம்

ஆனைக்குட்டி ஒழுங்கை, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி சின்னப்பு இரத்தினம் நேற்று (15.04.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்புவின் அன்பு மனைவியும் சிவராசா, சிவமணி, சிவசோதி (எழுதுவினைஞர்,வலி.தெற்கு பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும Dr.தர்மராஜசிங்கம் (R.M.O. மைக்லொயிட் வைத்தியசாலை, இணுவில்) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சினனம்மா, கனகம்மா, இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2004) வெள்ளிக்கிழமை இணுவில் மைக்லொயிட் வைத்தியசாலை வளாகத்திலுள்ள வைத்தியர் விடுதியில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி த.சிவசோதி (மகள்)
Dr. பொ. தர்மராஜசிங்கம் (மருமகன்)

*இணுவில்.* (30932)(13-16-40)

## செல்லத்துரை சுப்பிரமணியம்

(முன்னாள் முருங்கன் கடை உரிமையாளர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுப்பிரமணியம் நேற்று (15.04.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னத்தின் அன்புக் கணவரும் தவமலர், (அமரர்) சற்குணம், கமலாதேவி, சுசிலா, ஜெயக்குமார், சந்திரா, (அமரர்) விஜகுமாரி, வசந்தகுமாரி, பத்மராணி, சந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பாலசிங்கம், (அமரர்) கிருஸ்ணசாமி, (அமரர்) ஐயாத்துரை, வைகுந்தநாதன், தயாநிதி, சுப்பிரமணியம், இந்திரன், திலகநாதன், தனபாலசிங்கம், ஜெசிந்தா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2004) வெள்ளிக்கிழமை 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆலடி மயானத்தில தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானவைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (30928)(40-16-12)

தகவல்:
சு.ஜெயக்குமார் (மகன்)
குடும்பத்தினர்.

## மேரி றெஜினா (ராணி)

3 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட மேரி றெஜினா (ராணி) நேற்று (15.04.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் சந்தானநாயகி ஆகியோரின் அன்பு மகளும் அல்பிரட் மரியதாஸ் அவர்களின் பாசமிகு மனைவியும் Dr.அன்ரன் மரியதாஸ் (லண்டன்), மேரி எலிசபெத் (இலங்கை), யேசுதாஸ் (கனடா), வின்சன் பெர்னாண்டோ (லண்டன்), மேரி அன்னகிரேஸ் (கனடா), அன்ரன் ராஜ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கின்செபினா றொசற்றி, காலஞ்சென்ற யூட்றோசற்றி, றொசற்றிநற்கருணைராஜா (நோர்வே), யூட் ஜெயசீலி (யாழ். பல்கலைக்கழக 2 ஆம் வருடகலைப்பிரிவு மாணவி), யூட் பிரமிளா ஆகியோரின் அன்புத் தாயாரும் வலன்ரைன், சுதாகரன், நிலோந்தினி( நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியங்காவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவரது இறுதிச் சடங்கு பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3 ஆம் குறுக்குத் தெரு,*
*பருத்தித்துறை.* (30921)(34-13-16-40)

தகவல்:
பிள்ளைகள்.

# விஞ்ஞானப் பிரிவு மாணவருக்கு துரித மீட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.16

எதிர்வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான துரித மீட்டல் செயலமர்வு ஒன்றை வடமாகாண அதிபர்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இச்செயலமர்வுகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் எதிர்வரும் 19ஆம்,20ஆம்,21ஆம் திகதிகளில் தினமும் காலை 8 மணி முதல் பிற்பகல் 5.15 வரை இடம் பெறவுள்ளன.

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் இடம்பெறும் இச்செயலமர்வுக்கு யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப்பேரவை ஆதரவு வழங்குகின்றது.

இச்செயலமர்வில் இணைந்த கணித விரிவுரைகளை எம்.பிரேம்நாத், ஏ.குணசிங்கம் ஆகியோரும் இரசாயனவியல் பாட விரிவுரைகளை எஸ்.தில்லைநாதன், வீ.இராஜதேவன் ஆகியோரும பௌதிகவியல் விரிவுரைகளை எஸ்.கணேசன், எஸ்.பி.குணசீலன் ஆகியோரும் உயிரியல் பாட விரிவுரைகளை வீகுகாதரன், ஆர்.ஈஸ்வரதாசன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும் செயலமர்வில் முதலாம் நாளன்று இரசாயனவியலும், 2ஆம் நாளில் இணைந்தகணிதம் அல்லது உயிரியல்பாட விரிவுரையும், 3ஆம் நாளன்று பௌதிகவியல்பாட விரிவுரையும் இடம்பெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முதலாம் நாளன்று பௌதிகவியலும், 2ஆம் நாளன்று இரசாயனவியலும் இடம்பெறும். 3ஆம் நாளன்று இணைந்த கணிதம் அல்லது உயிரியல் பாடவிரிவுரை இடம்பெறும் இச்செயலமர்வுக்கு பாடசாலைச சீருடையுடன் மாத்திரமே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

# அரசமைப்பு மாற்றம் பற்றி நிபுணர் குழு ஆராய்வு

கொழும்பு,ஏப்.16

அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள அரசமைப்பு நிபுணர்களைக் கொண்டகுழு விரிவாக ஆராயவுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்தக்குழுவினர் ஜனாதிபதியை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து தமது ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடியதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் முன்னாள் செயலர் தலைமையில் இந்தக்குழு மீண்டும் கூடவுள்ளதாக ஜனாதிபதியின் சட்டத்தரணி எம்.எம்.சுபைர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க, பேராசிரியர் காமினி கீரவல்ல ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

அரசமைப்பில் கொண்டு வரப்பட வேண்டிய மாற்றங்கள் மற்றும் அதனைச்சார்ந்த அடிப்படை விடயங்கள் பற்றித் தொடர்ந்து இக்குழுவினர் விரிவாக ஆராயவுள்ளனர். அதன்பின் மீண்டும் குழுவினர் ஜனாதிபதியை எதிர்வரும் திங்கட்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் வழமையான நிகழ்வுகள் இடம்பெறும் அதேவேளை அதனை அரசமைப்பு நிர்ணயசபையாகவும் மாற்றியமைத்து அரசமைப்பைத் திருத்தியமைக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி)

## கருணா குழுவினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு வாகனங்களில் தப்பிவந்த கருணா குழுவினருக்கு இராணுவ வாகனங்கள் பாதுகாப்பளித்துக்கொண்டு உடன் வந்தன என்று நிகழ்வை நேரில கண்டவர்கள் கூறுகின்றனர்.

இரவு பத்துமணிக்கும 11மணிக்கும் இடையில் தம்புள்ளயில் பிரபலமான வாடி வீடு ஒன்றில் இரவ உணவுக்காகத் தமது வாகனங்களை நிறுத்தியுள்ளனர். இருபது பேரடங்கிய இக்குழுவில் மூன்று பெண்களும் காணப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

தம்புள்ள வாடி வீட்டில் கருணா குழுவினருடன் தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவரும் இரவு உணவருந்தினார் என்றும் செய்திகள் கிடைத்துள்ளன.

கருணா குழுவினர் இந்த வாடி வீட்டுக்கு திடீரென வந்தவுடன் வாடி வீட்டின் சகல நுழைவாயில்களும் ஹோட்டல் ஊழியர்களால் இழுத்து மூடப்பட்டுள்ளன. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இவ்வாறு மூடப்பட்டன என்று ஹோட்டல் சிப்பந்திகள் கூறியுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு மாறாக, மக்களால் நிராகரிக்கப்பட்ட கருணாவுக்கும், அவரது ஆதரவாளாகளுக்கும் அரச இராணுவம் பாதுகாப்பு வழங்கியது எப்படி?

கருணா குழுவினருடன் இரவு உணவருந்திய அரசியல்வாதி புதிய அரசாங்கத்தின் பிரதிநிதியாகவா சென்றார் என்ற சர்ச்சை இப்போது தென்னிலங்கை அரசியலில் தளம்பல் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்க உதவியுடன் கருணா குழுவினர் ஆஸ்திரேலியா சென்றுவிட்டனர் என்று இப்போது செய்திகள் அடிபடுகின்றன. இந்தத் தகவல உஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

(ஐ-க)

## இனிமேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பை அடுத்து விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் மேற்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மட்டு - அம்பாறை மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை மீட்ட பின்னர் முதல் தடவையாக இச்சந்திப்பு இடம் பெற்றது.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் புரூஹோவ்டே முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் 2.30 க்கு ஆரம்பமான இச்சந்திப்பு 4 மணிவரை இடம்பெற்றது.

இச்சந்திப்பில் 23 ஆவது படையணிக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் விஜய குணவர்த்தன, கேணல் எல்.அமரதுங்க ஆகியோர் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டக்களப்பு தளபதி ராம், அம்பாறை மாவட்ட கட்டளை அதிகாரி ஜனார்த தனன், ஜெயந்தன் படையணி சிறப்புத் தளபதி ஜகார்த்தன், மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன், அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதானச் செயலக மட்டக்களப்புப் பொறுப்பாளர் பவான், மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி பிரபா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-7-9)

## சிறுவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சிறுவர் இல்லத்தில் இரண்டு சிறுவர்கள் மீது ஓரினச் சேர்க்கைக்கு வலுக்கட்டாயமாக முயற்சிக்கப்பட்டதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் கடந்த 14 ஆம் திகதி முறைப்பாடு செய் யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாடு குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் சம்பந்தப்பட்ட சிறுவர் இல்லத்தின் நன்நடத்தைகளுக்குப் பொறுப்பான போதகரான சொலமன் வின்சன் (வயது 35) என்பவரைக் கைது செய்திருக்கின்றனர். அவர் நேற்று யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இவர்களை சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன் பிரஸ்தாப போதகரையும் பரிசோதனைக்கு உட்படுத்தி சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் நீதிவான் பணித்தார்.

பிரஸ்தாப இரு சிறுவர்களும் தாக்கப்பட்டு சிறுவர் இல்லத்தில் இருந்து விரட்டப்பட்டனர் என்று விசாரணையில் தெரியவந்ததாகப் பொலீஸார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தச் சிறுவர் இல்லத்தில் 29 சிறுவர்களும் 42 சிறுமிகளும் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-6)

### அரச வாகனத்துக்கு சேதம் விளைவித்தனராம்

# முன்னாள் அமைச்சர்கள் இருவரின் புதல்வர்கள் உட்பட 6 பேர் கைது!

கொழும்பு,ஏப்.16

அரசுக்குச் சொந்தமான வாகனங்களுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர்களின் 2 பிள்ளைகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பில் பிரபல ஹோட்டல் ஒன்றுக்குச் சென்ற 3ஆம் நிலைக் கல்வி அமைச்சுக்குச் சொந்தமான வாகனம் ஒன்றிற்கு 50 ஆயிரம் ரூபா மதிப்புள்ள சேதம் விளைவித்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா, மஹிந்த விஜயசேகர ஆகியோரின் 2 பிள்ளைகள் உட்பட மொத்தம் 6 நபர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தற்போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தகவல் தருகையில், இந்தச் சம்பவம தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைத்ததும் கொழும்பு மேல் நீதிமன்றில் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

(ஐ-ரி)

# கிழக்கில் இடம்பெயர்ந்தோருக்கு உதவ ஜனாதிபதியின் குழு

கொழும்பு,ஏப்.16

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலையடுத்து இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகளை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இலங்கை வானொலி தெரிவித்தது. இதற்கான விசேட குழு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கே.பாலபட்ட பெண்டி தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, மனித இடர்காப்பு பணியகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சரத் சந்திரஸ்ரீவிதானகே, சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆகியோர்கள் அடங்கியுள்ளனர்.

(ஐ-7)

## சபாநாயகர் தெரிவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏன.

நாடாளுமன்றத்தில் 105 ஆசனங்களைக் கொண்ட சிறுபான்மை அரசாங்கம் தனிப்பட்ட முறையில் தமது கட்சியின் சார்பில் சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் ஆதரவைப பெறவேண்டும் என்ற கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

தேசிய ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கம் மேற கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. அதிகாரத்திற்காகப் போட்டி போடும் எந்த ஒரு கட்சிக்கும் தாம் ஆதரவு வழங்கப் போவதில்லை என்று தேசிய ஹெல உறுமய கையை விரித்து விட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி எதிர்க்கட்சிகளின் சார்பில் முன்னாள் அமைச்ச பீ்ள்யூஜேஎம் லொக்கு பண்டாரவை சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராகக் களம் இறக்கவுள்ளது.

லொக்குபண்டாரவை சபா நாயகராக்குவதற்குச் சிறுபான்மைக்கட்சிகளின் ஆதரவும் உண்டு எனத் தெரிய வந்துள்ளது.

எந்த ஒரு கட்சிக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை என்று தேசிய ஹெல உறுமய தெரிவித்த போதிலும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தனிப்பட்டமுறையில் கருதது தெரிவிக்கும் போது டியூ குணசேகராவைவிட லொக்கு பண்டார சபாநாயகர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றன.

இதற்கிடையில் -

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டம் இன்று கொழும்பில் இடம்பெறவிருக்கின்றன.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வடக்கில் தங்கியிருந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுக் கொழும்பு சென்றடைந்தனர்.

சபாநாயகர் தெரிவு மற்றும் தெற்கு அரசியல் நிலை தொடர்பாக இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுக் கொழும்பை வந்தடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.


IIS
விசேட பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I :23.04.2004 பிரிவு II :24.04.2004
Diploma in Microsoft Office
Diploma in Desk Top Publishing
மாணவர்களே இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.

யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
பழைய மாணவர்களின் கவனத்திற்கு!
17.04.2004 அன்று நடைபெறவிருந்த வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.
சி.விக்கினராசா, தலைவர்.
பழைய மாணவர் சங்கம், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
த.வாமதேவன் செயலாளர்.
(C/34479)(36-38-13)

Dip. in Hardware
Period- 72 Hours
Time 09.30 - 16.30
BATCH III
28/4/2004 லிருந்து 12/5/2004
மிகக் குறுகியகால, மிகப் பயன்மிக்க, யாழ் நகரில் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்படும் இப் பாடநெறியில் இணைந்து பயன்பெறுவதற்காக உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்
பதிவுகளிற்கு
STP
73, Palaly Road, Kantharmadam,
T.P:021-222-2674

NEW SCIENCE COLLEGE
JAFFNA
A/L 2006
ஒளியியல்
TUE.,WED.- 4.00-5.00 (p.m.)
பொறியியல்
TUE , THU. 6.00-7.00 (a.m.)
ஆரம்பம் 20.04.2004
By.கருணாநிதி B.Sc (Spl)
குறிப்பு:- நேரம் குறித்த இறுதி முடிவுகள் வகுப்பில் எடுக்கப்படும்.
(36)(30931)(38)

LOGIC
S.R.J. சுதன்
A/L 2006
ஆரம்பம்:-
17.04.04 1.00 p.m. (Sat.)
பிறைற்றின் கல்வி நிலையம்
சங்கத்தானை.

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies...
வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது
ரோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை - 011 2 360290, 2 360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.